# சாளரம்

ஜூலை 1991 விலை: 12 ரூபா




மாதாந்த இளையோர் இதழ்சுவடி

## சாளரம்


தொடர்பு முகவரிகள்

அலுவலகம்:-

**சாளரம்**
வேம்படி வீதி
யாழ்ப்பாணம்.

**அ. முருகேசு**
றோ. க. த. க. பாடசாலை
புதுக்குடியிருப்பு

**அ. கௌரீகாந்தன்**
கிருஷ்ணபுரம்,
கிளிநொச்சி.


### போட்டிகள்

சாளரத்தில் வெளியாகும் சகல போட்டிகளுக்குமுரிய விடைகள் யாவும் வெளியான இதழுக்கு அடுத்த மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் சாளரத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

## உள்ளே.....


| | பக்கம் |
|---|---|
| தெறிப்பு | 2 |
| ஆசிரியர் தலையங்கம் | 3 |
| வனம் ஒரு வனம் | 5 |
| பனிப்போர் முடிவடைந்துவிட்டதா? | 8 |
| காட்சிக்காகவா வாழப்பயிலவா? | 9 |
| பதநீர் பருகுவீர் | 10 |
| வன்முறையின் பலிக்கடாக்கள் | 11 |
| சிவவாக்கியார் | 12 |
| உண்மைக்கதை | 13 |
| நிலா முற்றம் | 16 |
| கவிதை | 17 |
| நுண்ணறிவுப் போட்டி 1க்கான விடைகள் | 20 |



# "சமூகப் புரட்சி என்பது பண்பாட்டு மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக அமையவேண்டும்"

"நான் கலை கலைக்காக அல்லாமல், மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவன்.

......கலை இலக்கியப் படைப்புகள் மக்களைச் சிந்திக்கத் தூண்டவேண்டும். பழைமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைபட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும். மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

...... இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்துக்கு அமைய, கலை, இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான புரட்சிகரமான படைப்புகளை சிருஷ்டிக்க வேண்டும். இந்த புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டுவதாக அவை அமைய வேண்டும். சமூக புரட்சிக்கு வித்திடுவதாக அமைய வேண்டும்.

...... சமூகப் புரட்சி என்பது பண்பாட்டு மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்பதே எனது கருத்து. சமூகப் புறநிலையில் மாற்றம் ஏற்படும் பொழுது அக நிலையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியமானது. பழைய முரண்பாடுகள் நிறைந்த சமூக உறவுகளை உடைத்தெறிந்து, புதிய சமூக உறவுகளை கட்டியெழுப்பும்போது இந்த சமூக மாற்றத்திற்கு ஏற்ப, மக்களின் மனவுலகிலும் ஒரு புரட்சி நிகழ வேண்டும். புதிய சமுதாயத்தில் புதிய உறவுகளைக் கொண்ட, புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள் ஒரு புரட்சிகரமான உலகப் பார்வையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இங்கு தான் பண்பாட்டு மறுமலர்ச்சி முக்கியமாகிறது.

...... மிகத் தொன்மை வாய்ந்த நீண்ட வரலாறுடைய எந்தவொரு பண்பாட்டு அம்சங்களிலும் பழமைவாத கருத்துக்களும், பார்வைகளும், காலத்துக்கு ஒவ்வாத வழக்குகளும் சம்பிரதாயங்களும், மூட நம்பிக்கைகளும், வேரூன்றியிருப்பது இயல்பு. எமது பண்பாடும் இதற்கு விதிவிலக்கல்ல. பண்பாடு என்ற கோலத்தில் எமது சமூக வாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்குகளை, கருத்தோட்டங்களை நாம் இனம் கண்டு களைதல் அவசியம்."

- தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் முத்தமிழ் விழா வாழ்த்துச் செய்தியில் இருந்து தொகுக்கப்பட்டவை.

## தெறிப்பு

❁ 'சாளரம்' இளையோருக்கான இதழ் என்று குறிப்பிடப் பட்டிருந்தபோதும் பெரியோர் படிக்கக் கூடிய அம்சங்களும் இதில் காணப்பட்டது. மென் மேலும் தேவையான பல விடயங்களுடன் சாளரம், வெளிவர வேண்டும் என்று எதிர்பார்த்து சாரளத்தை வாழ்த்துகிறேன்.

யூனோல்ட் பிரான்ஸிஸ்
யாழ்ப்பாணம்

❁ இன்றைய காலகட்டத்தில் வாசிப்பதற்கு நல்ல தொரு சஞ்சிகை இல்லை என்ற குறையை 'சாளரம்' போக்கும் என்கிற எதிர்பார்ப்பு முதல் இதழை படித்தவுடன் ஏற்பட்டது, புதிதாக வெளியாகும் இதழ்கள் ஏதோ காரணங்களால் இரண்டொரு இதழ்களுடன் நின்று போய் விடுகிறது. 'சாளரம்' அவ்வாறில்லாமல் தொடர்ந்து வெளிவர வேண்டு மென்பதே எனது பேரவா.

நா. பத்மநாதன்
மானிப்பாய்

❁ மாணவர்களுக்கான பல்சுவை விடயங்களை 'சாள ரம்' கொண்டுள்ளது வரவேற்கத்தக்கது. தயவு செய்து கட்டுரைகளை எளிமையாக்கி பிரசுரித்தால் மாணவர் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும் எனபது எனது கருத்தாகும். யாழ்ப்பாணத்தில் வெளியாகும் இந்த சஞ்சிகையின் முதல் இதழே வன்னிப்பகுதிக்கு வந்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். ஒவ்வொரு இதழும் இவ்வாறே வன்னிப்பகுதிகளிலும் கிடைக் கக்கூடியதாக தொடர்ந்து ஏற்பாடுகள் செய்யவும். 'சாளரத்தின்' வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

கா. கிருஸ்ணமூர்த்தி
முல்லைத்தீவு

❁ கோலம் சிதையா சிறைக்கூடக் கல்விமுறை
ஞாலந்தனை சிறையாதிருந்ததனால் - சீலம்
படைக்கப்புறப்பட்டோம் - தாளிட்டப்பே ரிரும்பு
தடையைத்தகர்த்து சாளரம் திறப்போம் இனி.

வளவை வளவன்

❁ கல்வி என்பது மனிதனை தொழில் புரியும் இயந்திர மாக உருவாக்கும் சாதனமாக இருக்கக்கூடாது. அறி வையும் சமூக பிரக்ஞையையும் நாட்டுப்பற்றையும் ஒருமித்து வளர்ப்பதாகவே கல்வி அமையவேண்டும். ஆனால் எமது பாடநூல்கள் அவ்வாறானதாக அமையவில்லை என்பது மிகப்பெரிய குறைபாடே 'சாளரம்' அதனை நிவர்த்தி செய்யும் விதமான கருத்துக்களுடன் மாதாமாதம் வெளிவரவேண்டும். என எதிர்பார்க்கிறேன். சாளரத்திற்கு எனது மன மார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. இராமநாதன்
கோண்டாவில்

❁ சாளரத்ினூடாக புதிய காற்று இளையோர் இதயங்களை நிரப்பவேண்டும். இருள்சூழ்ந்த மனங் களில் சுதந்திர ஒளிபரவச் செய்யவேண்டும். தனியே எழுத்துடன் நின்று விடாது, அதை செயல் வடிவ மாக கொண்டுவர 'சாளரம்' உதவவேண்டும். சாளரத்தின் வழியே சுதந்திரமான தமிழீழத்தின் அடித்தளங்கள் தெரிய வேண்டும். அறிமுக சாள ரத்தில் சில குறைகள் தென்பட்டாலும் பல நிறை வுகள் அதனை மறைத்து விட்டன என்றுதான் கூற வேண்டும்.

ந. குகதாசன்
ஏழாலை கிழக்கு

## விமர்சனக் குறிப்புகள்

13/6/91ல் 'சாளரம்' அறிமுக விழாவும், விமர் சன அரங்கும் கிளி/கிளி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. திரு. கருணாநிதி (ஆசிரியர்) அவர்கள் தலைமை தாங்கினார்கள். பிரதி கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி, யாழ் பல்கலைக்கழக விவசாயபீட முதல்வர் கலாநிதி சிவகடாட்சம், திரு. விந்தன். ஆசிரியர் கிளி. மத்திய மகாவித்தியாலயம், திரு. அன்ரன் ஆசிரியர் உருத்திரபுரம் மகாவித்தியாலயம் சிறப்புரை வழங்கினார்கள். கிளிநொச்சி கொத்தணி யைச் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கு பற்றினர்,

கலாநிதி சிவகடாட்சம் அவர்கள் இலங்கையின் உண்மையான வரலாறு பாடசாலை நூல்களில் பதிக் கப்பட வில்லை என்பதை எடுத்துக் கூறினார். யாழ்ப் பாண இராச்சியம் நிலைத்து நின்றமையையும், அதன் தனித்துவத்தையும். சுருக்கமாக விளக்கினார். போட்டிமுறைக் கல்வி பாடநூல்களுக்கு அப்பால் எதையும் கற்க அனுமதிக்காத ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது. மாணவர்கள் இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும். வெளிவிடயங்கள் நிறையக் கற்கவேண்டும், என்று கூறினார். தனித் தமிழ் பிர யோகத்தைப் பொறுத்தவரை தான் அக்கருத்துடன் முழுமையாக இணைய முடியாதுள்ளது என முன் வைத்தார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய திரு. விந்தன் ஆக்க இலக்கியமும் மாணவர்களும் என்ற தலைப்பின்

(4ஆம் பக்கம் பார்க்க)

கதவு 1 காற்றலை 2

# உள்ளவா!

'சாளரம்' ஊடாக 2வது காற்றலையை உங்கள் கைகளில் தவழவிடுவதில் பெருமை கொள்கிறோம். 1வது காற்றலைக்கு வாசகர்களாகிய நீங்கள் தந்த வரவேற்பிற்கு எமது நன்றிகள். வன் தன்மையும் கடுந்தன்மையும் இன்றி உள்ளத்தையும், அறிவையும் வருடித்தந்திடும் மென் காற்றலையாக, தென்றலாக வளர்ந்திட உங்கள் ஒத்துழைப்பு என்றும் உண்டென்று நம்புகின்றோம்.

பல்சுவையும், பல்துறையும் கொண்ட ஒரு அறிவு சார்ந்த படைப்பாக சாரளம் அமைய வேண்டும் என்பதே எமது அவாவாகும். ஆனால் 24 பக்கங்கள் கொண்ட ஒரு காற்றலையில் அனைத்துச் சுவைகளையும் துறைகளையும் கலக்க முடியாதுள்ளோம். மேடையின் வரம்புக்குள் நின்றுதானே எம்மால் நடனமாட முடியும்? ஆகவே இந்த இதழில் உள்ளடங்காத துறைகள் அடுத்த இதழில் வெளிவரும். உதாரணமாக, விளையாட்டுபற்றி 2வது காற்றலையில் இல்லை. அது மூன்றாவது காற்றலையில் இடம் பெறும்; வாசகர்கள் நிலைமையைப் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம்.

சமூகம் பற்றியும், கல்விபற்றியும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும்; இளையோர்கள் குறிப்பாக மாணவர்கள் இவைபற்றி சிந்திக்கும் ஒரு நிலையை வளர்ப்பதுமே எமது நோக்கமாகும். இத்துறையில் நாட்டமுடைய அனைவருடனும் நாம் கூடி உழைக்க விரும்புகிறோம். அதேபோல் அவர்களின் ஒத்துழைப்புகளையும் எதிர்பார்க்கின்றோம் ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

'சாரளம்' வாசகர், வட்டங்கள் அமைப்பது எமது அடுத்த இலக்காகும். இவ்வித வாசகர் வட்டங்கள்மூலம் நடாத்தப்படும் நூல் பற்றிய விமர்சனங்கள் ஒரு பலனுள்ள விழிப்புணர்வு கூட்டங்களாக அமைய வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். வெளிவந்த கட்டுரைகளையும், விடயங்களையும் ஒரு ஆரம்பமாகக் கொண்டு விவாதத்தை விரிந்த பரிமாணத்தில் நடத்துவதன் மூலம் நிறைந்த பயனைப் பெற விரும்புகிறோம்.

தனித்தமிழ் பிரயோகம் தமிழர்கள் மத்தியில் ஒரு கொள்கையாகவும், சுய கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒரு நடைமுறையாகவும் வர வேண்டும் என்பதே எமது அவாவாகும். ஆனால் இதை ஒரே இரவில் நடைமுறைச் சாத்தியமானதாக்கி விட முடியாது. புதிய சொற்பத ஆக்கங்கள் என்பது அவ்வளவு சுலபமானதல்ல. பயன்படுத்தும் ஒரு சொற்பதம் எடுத்த எடுப்பில் பொதுவாக அனைவராலும் அங்கிகரிக்கப்பட்டு விடவும் முடியாது ஆகவே சாரளம் தன்னால் முடிந்தளவிற்கு தனித்தமிழ் சொற்பதங்களையே பிரயோகிக்கும். இதில் நாம் தவறுகளும் விட இடமுண்டு வாத விவாதத்திற்கு உள்ளாகியுள்ள சொற்பதங்களையோ வாத விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய சொற்பதங்களையோ கூட நாம் பயன்படுத்தக்கூடும். தமிழீழ மக்களின் அறிவுஜீவ உலகம் பொதுமுடிவாக குறைந்த பட்சம் பெரும்பான்மையோர் முடிவாக ஒரு சொற்பதத்தை ஏற்றுக்கொள்ளும் வரை இம் முரண்பாடுகள் தொடரவே செய்யும். அறிவு ஜீவ உலகம் ஏற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. நடைமுறையில் அது முரண்பாடுகளை ஏற்படுத்தாததாய் அமையவேண்டும். மக்களின் பாவனைக்கு சுலபமானதாயும் இருக்கவேண்டும்.

☐ ☐ ☐

## வெகுசனம்

ஒரே செய்தியை ஒரு குறித்த கால அளவீட்டில் அதிக அளவு மக்களுக்கு விநியோகிப்பதற்குரிய எண்ணக்கருவாக ஒரு சிலரால் ஒருங்கமைக்கப்பட்டதே ''வெகுசன சாதனம்'' என்ற தொடராகும். பொதுமக்களை அன்னியப்படுத்தும் ஒரு தொடராகவே ''வெகுசனத்திரள்'' (மாஸ்) என்பது பயன்படுத்தப்பட்டது. இத்தொடரானது பொதுமக்களை அரசியல் நோக்கிலும் பண்பாடு அடிப்படையிலும், சுரண்டுவதற்கான ஓர் அளவீடாகவே மேற்கு நாடுகளிலே பயன்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதரதும் தனித்துவமான ஆளுமைக் கோலங்களை மறந்து, அவர்களை ஒரு திரளாகக் கருதுதல் தீவிரமான ''சந்தைப் பொருளாதாரத்தின்'' பண்பைப் புலப்படுத்துகின்றது.

தரக்குறைவான சுவைகளை வளர்த்தலும், கனங்காத்திரமான விஷயங்களை நொய்மைப்படுத்துதலும் வெகுசனங்களைத் தாழ்மைப்படுத்தும் நடவடிக்கைகளாகும். தகவல், கல்வி என்ற பண்புகளை கைவிட்டு, தனித்துப்பொழுது போக்கை மாத்திரம் வழங்குதலும், வெகுசனங்களின் ஆளுமையை நிராகரிக்கும் நடவடிக்கைகளாகும்.

மலினமான பொழுது போக்கை நிராகரிக்கும் இன்றைய எமது சூழல் ஆற்றலும், ஆளுமையும் கொண்ட ஒரு சமூக நிருமாணத்தைப் பற்றிய குறியீடாகவே அமைகின்றது.

சபா ஜெயராஜா

தொடர்பியல்

அதிகம் பயன்படுத்தப்படுவதும்
அதிகம் ஆராயப்படாததுமான புலம்.

நன்றி முத்தமிழ் விழா மலர் 1991

## தெறிப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் உரையாற்றினார். 'சாக்குப் போக்கல்ல யதார்த்த உண்மை' என்ற கட்டுரை ஆசிரியர்களின் வரவின்மையால் மாணவர்கள் ஏமாந்து செல்லும் விவகாரத்தை புறக்கணித்து விட்டது என்பதை எடுத்துக் காட்டினார்.

ஆக்க இலக்கியங்களைப் பொறுத்தவரையில் சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் இலக்கிய ஆக்கங்கள் தோன்றுவது மிக அற்பமாகவே உள்ளது. குறிப்பிட்ட ஓரே வகையான இலக்கியத்தைப் படைப்பது இன்று ஒரு கோலமாக (Fashion) மாறிவிட்டது. போர்கால நிலமையில் மக்கள் படும் அவலங்கள். தடைகளை மீறி மக்கள் போடும் எதிர் நீச்சல் முயற்சிகள் இலக்கிய வடிவம் பெறவில்லை. ஒரு வரலாற்றுக்குரிய இலக்கிய பதிவுகளே இல்லாத நிலமையே தோன்றியுள்ளது. இக் குறைபாடு நீக்கப்பட வேண்டும். மாணவர்களும் ஆசிரியர்களுமாகிய நீங்கள் நிறைய படைக்க வேண்டும். கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி போன்றவற்றை 'சாளரம்' நடத்துவது அவசியம் எனச் சுட்டிக்காட்டினார்.

அடுத்ததாக திரு அன்பழகன் அவர்கள், விளையாட்டுத்துறையும் மாணவர்களும் என்ற தலைப்பின் கீழ் உரையாற்றினார். ''ஸ்போர்ட்ஸ் இன்று ஒரு சடங்காகவே மேற்கொள்ளப் படுகிறது. அங்கும் போட்டி மனப்பான்மையே நிலவுகிறது. விளையாட்டுகள் உண்மையிலேயே சமுகத்தின் ஆரோக்கியத்தை வளர்ப்பதற்கும், மதிப்பிடுவதற்குமான ஒரு கருவியாகும்.

சில வளர்ச்சி பெற்ற நாடுகள், விளையாட்டுப் பயிற்சிக்கு ஏராளமாகச் செலவளித்து வருகின்றன. இதை அவர்கள் வீண் செலவு என்றே கருதுவதில்லை. உளவியல் வளர்ச்சிக்கும், நோயற்ற உடல் வளர்ச்சிக்கும் இது துணைபுரிவதால் இச் செலவு வைத்திய சாலைகளின் எண்ணிக்கையை குறைக்கவே உதவும் என கருதுகிறார்கள் .........''

அதனைத் தொடர்ந்து பிரதி கல்வியதிகாரி க. கந்தசாமி அவர்கள் உரையாற்றினார்கள். அவர் தமது உரையில் பரீட்சைக்கான கல்வி என்பது பாடசாலைக்கு ஒரு போதை வஸ்துப்போன்றுள்ளது, அவ்விதமானதொரு கல்வி இல்லாவிட்டால் பாடசாலையே இயங்காது என்ற நிலையே இன்று நிலவுகிறது. இவ்விதமான தொரு கல்வி முறை எமக்கு அறிமுகமாகி சுமார் 150 வருடங்களாகி விட்டன. அந்நியர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட கல்வியின் தாக்கமே இதுவாகும். எமது பாரம்பரிய கல்வி முறைக்கு எதிராக அதைக் கெடுக்க முன்வைத்த அந்நிய திட்டமே பரீட்சை முறையாகும்.''

மத்திய மகா வித்தியாலய மாணவன் செல்வன் திருஞானேஸ்வரனும் உரையாற்றினார்.

பிரதம ஆசிரியர் பதிலுரையும், கருத்துரையும் வழங்கினார்.

### கல்வி

# முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்

தமிழ் நாட்டிலும் இலங்கைத் தீவிலும் தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியினை முதன் முதலாகப் பெற்ற பெருமையும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் முதலாவது இலங்கையர் என்ற பெருமையும். தமிழிலே முதலாவது நாடக தமிழ் இலக்கண நூலொன்றை (மதங்க சூடாமணி) படைத்த பெருமையும் விபுலானந்தருக்குரியதேயாகும். 16 ஆண்டுகால ஆராய்ச்சியின் பின் 'யாழ் நூல்' என்னும் இசைத் தமிழுக்கோர் நூலையும் ஆக்கினார். இத்தனைக்கும் விபுலானந்தர் ஒரு ஆங்கில விஞ்ஞான பட்டதாரி என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கலைமகள் மாதசஞ்சிகையில் சோழ மண்டலத் தமிழும் ஈழ மண்டலத் தமிழும் எனும் கட்டுரை மூலம் யாழ்ப்பாண, மட்டக்களப்பு பேச்சுத் தமிழ், பழந் தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கு உட்பட்டது என்பதை தமிழ் நாட்டுக்கு விளக்க முயற்சித்துள்ளார்.

அவர் பிறந்த பொன்நாடான மட்டு நகரில், இவ்வளவு அனர்த்தங்கள் மத்தியிலும் விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டு விழா சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

சபைத் தலைவர் — திரு. கே. தியாகராஜா.
கல்விப் பணிப்பாளர். முன்னாள் மட்டுநகர் மேயர். முன்னாள் அதிபர் சிவானந்தா வித்தியாலயம்.

செயலாளர்:- கலாநிதி வி. சிவலிங்கம்.
பதிவாளர், கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம்.

பொருளாளர்:- கே. கார்த்திகேசு.
முன்னாள் ஆணையாளர், மட்டுநகர் மாநகர சபை.

விபுலானந்தரின் அரும்பெரும் பங்களிப்புக்களை இச் சபை வெளிக்கொணரும் என எதிர்பார்க்கின்றோம்.

# வனம் ஒரு வளம்



**துளிர்:-** ஐயா, நீங்களும் உங்களைப் போன்ற பல அறிவியலாளர்களும் (விஞ்ஞானிகளும்) காடுகள் அழிக்கப்படுவதைப் பற்றி பெரிய சர்ச்சையை எழுப்புகிறீர்கள். அவை ஏன் அழிக்கப்படுகின்றன என்று எனக்கு சற்று விளக்கமாகச் சொல்வீர்களா?

**அறிவியலாளர்:-** காடுகள் இன்று மட்டுமல்ல வரலாற்றுக் காலந் தொட்டே அழிக்கப்பட்டு வந்தன. ஆதிவாசியிலிருந்து இன்று நாகரீக மனிதனாக உயர்ந்திருக்கும் நாம் மேலும், மேலும் நம் தேவைக்காக காடுகளை அழித்துக்கொண்டுதான் வருகின்றோம், மனிதனுக்கு சாலைகள் தேவை. பாசனத்திற்காகவும் மின்சார உற்பத்தி செய்வதற்காகவும் அணைகளைக்கட்டி நீரைத் தேக்கி வைக்க வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. மனிதன் வீடுகளைக் கட்டவும் மரச்சாமான்களைச் செய்யவும் மரத்தையே நம்பவேண்டியிருக்கிறது. இதற்கும் மேலாக கோடிக் கணக்கான தொன்அளவில் காகிதம் தயாரிக்கவும் மரம் தேவைப்படுகிறது. உணவு சமைக்க உதவும் முக்கிய எரிபொருளாக விறகு எமக்கு தேவைப் படுகிறது. மனிதன் அரிசி போன்ற உணவு தானிய வகைகளை உற்பத்தி செய்யவும் காட்டை அழிக்கத் தேவை ஏற்படுகிறது.

**துளிர்:-** காடுகள் அழிக்கப்படுவதை சரி என்று ஒப்புக்கொள்வதைப் போல் அல்லவா நீங்கள் பேசுகிறீர்கள்? மனிதன் காடுகளை அழிப்பதற்கும் தகுந்த காரணம் இருப்பதாகவே எனக்கும் தோன்றுகிறது. ஆகையால் காடுகளை அழிக்காதீர்கள் என நீங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துவது ஏன்? இப்படி நீங்கள் சொல்வது நம் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவது போல் ஆகி விடாதா?

**அறிவியலாளர்:-** கட்டுக்கடங்காமல் தொடர்ந்து காடுகளை அழித்துக் கொண்டு செல்வது நம்மை நாமே தற்கொலைப் பாதைக்கு அழைத்துச் செல்வதற்கு ஒப்பாகும். இப் புவியிலுள்ள அனைத்தும் வாழ்வதற்கு இன்றியமையாத காற்றையும், மண் வளத்தையும்-நீர் வளத்தையும் காப்பதற்கு காடுகள் அவசியமாகின்றன.

நாம் காணும் தாவரங்களும் மரங்களும் ஒருவிதத்தில் பூமியின் நுரையீரல்களுக்கு ஒப்பானவை. இவை ஒளிச்சேர்க்கையின் போது கரியமிலவாயுவை ஏற்றுக் கொண்டு நாம் சுவாசிக்க உதவும் பிராணவாயுவை வெளிப்படுத்துகின்றன. நம்காற்று மண்டலத்திலுள்ள முழுவதும் தாவரங்களாலேயே உற்பத்தி செய்யப்படுகிறது என்ற சங்கதி உனக்குத் தெரியாதா? அவை எல்லாவற்றையும் ஒரு கணத்தில் நீ வெட்டி வீழ்த்தி விட்டால் பின் தேவைக்கு நீ எங்கே போவாய்?

காட்டுப் பகுதியிலுள்ள மண் வேகமாக நீரை உறிஞ்சும் தன்மை கொண்டிருக்கிறது. அந்த மண் பஞ்சைப்போல நீரை உறிஞ்சிக் கொள்ளும் இயல்பு கொண்டிருக்கிறது. உயிர்ச்சத்துக்கள், பூச்சிகள், தாவரங்களின் வேர்கள் ஆகியன காட்டு மண்ணில் அதிகமாக இருப்பதே அம்மண் நீரை நன்கு உறிஞ்

சிக் கொள்வதற்குக் காரணமாகும். விளைச்சல் நிலப்பரப்பைக் காட்டிலும் காட்டு மண் பரப்பு மூன்று மடங்கு தண்ணீரை அதிகமாக உறிஞ்சிக்கொள்ளும் ஆற்றல் பெற்றிருக்கிறது. வறண்ட நிலங்களைக் காட்டிலும் காட்டுமண் பலமடங்கு நீரை தக்கவைத்துக் கொள்கிறது. பிறகு கொஞ்சம், கொஞ்சமாக ஆண்டு முழுவதும் சிறு நீரூற்றாகவும் ஓடையாகவும் தண்ணீரை வெளிப்படுத்துகிறது. இதனால் ஆற்றுப்பகுதிகளில் நீர் வற்றிப்போகாமல் காக்கப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன் ஆற்றில் நிறைய மீன் பிடித்ததாகவும், நீந்தி விளையாடியதாகவும் உன் தாத்தா பாட்டியோ அல்ல வேறு பெரியவர்களோ சொல்லக் கேட்டிருக்கலாம். ஆனால் நாம் அங்கு பார்ப்பதோ இன்று வெறும் மணல் படுகைதான்! அந்தக்காலத்தில் வருடத்தில் 9 மாதகாலமும் ஆற்றில் நீர் ஓடிக்கொண்டிருந்தது. 3-மாதங்கள் மட்டும் ஆறு வற்றியிருந்தது. ஆனால் இன்றோ ஒன்பது மாதங்களும் ஆறுகள் வற்றியிருக்கும் காட்சியை நாம் காண்கின்றோம். மழைபெய்யும் பொழுது இந்த வறண்ட பகுதிகளிலுள்ள சரிவுகள் வழியே நீர் அடித்துச் செல்லப்படுகிறது. இதனால் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் பிறகு ஆண்டு முழுவதும் நிலம் காய்ந்திருக்கும் நிலை ஏற்படுகிறது.

**துளிர்:-** அப்படியென்றால் அதிக மழைபெய்வதற்கு காடுகள்தான் காரணம் என்று சொல்கிறீர்களா?

**அறிவியலாளர்:-** இது ஒரு சர்ச்சைக்குரிய கேள்விதான். பருவ காலங்களில் பொழியும் மழைக்கும் காட்டு வளப்பரப்பிற்கும் உண்மையாகவே தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் மற்றொருவகையாகவும் காட்டில் மழை பொழிவதற்கு வாய்ப்புண்டு. பகற்பொழுதில் தாவரங்களின் இலைகளிலிருந்தும் ஆவியாகும் நீர் பிறகு மேகங்களாக வானில் ஒன்றுதிரண்டு பின்மழையாகப் பொழியவும் செய்கிறது. இவ்வாறு பெய்யும் மழை கோடை காலத்தின் வெம்மையினால் காடு வறண்டு போகாமல் காக்கவும் உதவுகிறது. இன்று நாம் எதிர் நோக்கும் வறட்சிக்கும், ஆறுகளில் குறைவான நீர் வரத்துக்கும் காடுகள் அழிக்கப்படுவதே காரணம் என்பதைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் கூற முடியும்.

**துளிர்:-** காடுகள் எவ்வாறு மண்வளத்திற்குத் துணைசெய்கிறது?

**அறிவியலாளர்:-** மழை அதிகமாகப் பெய்யும் போது நிலத்தில் விழும் நீர் வழிந்தோடிச்செல்லாமல் தடுத்து நிறுத்துவதற்கு பல அடுக்குகளாக அமைந்துள்ள காட்டுப்பரப்பு உதவுகிறது. அங்கேயுள்ள மரங்கள் அனைத்தையும் வீழ்த்திவிட்டால் ஓரிரு ஆண்டுகளில் அந்தப்பகுதி முழுவதும் வெறும் பாறைகளைத் தவிர வேறு ஒன்றையும் காண இயலாது.

**துளிர்:-** எத்தனையோ மக்கள் விவசாயம் செய்வதற்கு நிலமில்லாமல் இருக்க அவர்கள் ஏன் இந்தக்காட்டு நிலங்களை தங்கள் உபயோகத்திற்காகப் பயன் படுத்திக் கொள்ளக் கூடாது?

**அறிவியலாளர்:-** ஒன்றை நீ கட்டாயம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மரங்களை வெட்டினோம் என்றால் மண்மட்டும் அடித்துச் செல்லப்படுவதில்லை. அத்துடன் பயிர்களுக்குத் தேவையான சத்துப்பொருட்களையும் நாம் இழக்க

### காட்டுவளம்

வெப்ப மண்டல மழைக் காடுகள் கோடிக் கணக்கான விலங்கினங்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு உடையனவாக இருக்கின்றன. பூமியின் நிலப்பரப்பால் 6 சத வீதமே இந்தக் காடுகள் பரவி இருந்தபோதிலும் அவற்றில் மூன்றில் இருபங்கு நமக்குத் தெரிந்த தாவரங்களும், 80சதவீதம் உலகில் காணப்படும் பூச்சியினங்களும் 40 சதவீதம் இரையாகக் கொள்ளும் பறவைகளும், 90 சத வீதம் மனிதர் வழியல்லாத சாராத பால்குடி உயிரினத் தொகுதிகளும் (Primate) இருக்கின்றன.

நேரிடுகிறது. இந்த இடங்களில் ஒருமுறையோ அல்லது இரண்டு முறையோ தான் பயிர் செய்ய முடியும். பிறகு அடுத்த வேளாண்மைக்கு வேறு ஒரு காட்டுப் பகுதியை அழித்துத்தான் பயிர் செய்ய வேண்டியிருக்கும். காரணம் ஓரிருமுறை விளைச்சலிலேயே மண்ணிலுள்ள சத்துக்களெல்லாம் இழக்கப்பட்டு விடுகின்றன. இவ்வாறு தொடர்ந்து காட்டுப் பகுதிகளைச் சிறிது சிறிதாக அழித்து பயிர் செய்யத் துவங்கினோமானால் மண்ணும் வளமற்றதாகிவிடும். இந்தப் போக்கு தொடர்ந்தால் மிஞ்சுவது வெறும் தரிசு நிலங்களே!

**துளிர்:-** பிறகு விவசாயமும் இல்லாமல் மக்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு உருவாகும்?

**அறிவியலாளர்:-** நீ ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். காடுகள் நமக்களிக்கும் பொருட்களையும் அவை மக்களைப் பாதுகாத்து வரும் நன்மையையும் விலை மதிப்பிட்டால், காட்டு வளம் என்பது ஒரு பெரிய, மிகப்பெரிய சேமிப்பு என்பது விளங்கும். இத்துடன் காற்றுக்கும், மண்ணிற்கும், நீருக்கும் செய்யும் காடுகளின் இன்றியமையாத சேவையையும் சேர்த்துக் கொண்டால் அவற்றின் விலை மதிப்பை யார்தான் கணக்கிட முடியும்? மற்றொரு விஷயமும் உனக்கு சொல்ல நான் விரும்புகிறேன். காடுகள் அடர்த்தியான பசுமை ஆடையைப்போர்த்தி விளங்குவதால் அவை சூரியனிலிருந்து வரும் வெப்பத்தை உட்கிரகித்துக் கொள்கின்றன. ஆனால் வறண்ட நிலங்களோ சூரிய வெப்பத்தை பிரதிபலிப்பதாகவே இருக்கின்றன. மேலும் காடுகள் அனைத்தையும் அழித்து விட்டால் பூமி விரைவில் குளிர்ந்து போய்விடும் என சிலர் முன் எச்சரிக்கை செய்துள்ளனர். இக்குளிர்ச்சியால் ஜீவராசிகள் அனைத்துமே மடிந்து விடுமாம்.

**துளிர்:-** ஐயா! உங்களிடம் நான் இன்னொரு கேள்வி கேட்கட்டுமா? ஒருவேளை காடுகளை அழித்து இந்த இடங்களில் வேறு தாவரங்களையோ மரங்களையோ வளர்த்தால் நமக்கு காட்டை அழிப்பதால் கிடைக்கும் பலன்களோடு அவைகளை மீண்டும் உருவாக்கிய பலன்களும் கிட்டுமா?

**அறிவியலாளர்:-** இல்லை, துளிர்! உனது கேள்விக்கான விடை அவ்வளவு சுலபமானது அல்ல, நீ சொல்வது ஒரு சில இடங்களுக்குப் பொருந்துவதாக இருக்கலாம். இதற்கான காரணம் முற்றிலும் வேறானது. காசைவிட விலை மதிப்பிடமுடியாத அரிய சொத்துக்களை சேமித்துள்ள வங்கிகளாக இந்த நடுநிலக் காடுகள் விளங்குகின்றன. அப்படி அவை சேமித்து வைத்திருக்கும் பொருள்தான் என்ன? அதனை நம் ஜீவன்கள் என்கின்றோம். ஜீவன்கள் என்றால் என்ன? என்பதைப் பற்றி உனக்கு விளக்க வேண்டுமென்றால் ஒரு பெரிய கதையே சொல்ல வேண்டியிருக்கும்.

—நன்றி — துளிர்

## பயிர்ச்செடிகள் வளர மின்சாரம்

இசையைக் கேட்டால் பயிர்கள் வளர்கின்றன என்று முன்பு ஆராய்ச்சி செய்து வெற்றி பெற்றார்கள். இப்போது லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த தாவரவியல் வல்லுநர்கள் புதிதாக ஓர் ஆராய்ச்சி செய்துள்ளனர். வளரும் செடிகளின் மீது மின்சாரத்தை பாய்ச்சினால் என்ன நடக்கும் என்று ஆராய்ந்தார்கள். அவர்கள் புகையிலைச் செடிகளின் மீது மின்சாரத்தைப் பாய்ச்சி ஆராய்ச்சி செய்தார்கள். மின்சாரப் பாய்ச்சலினால் அந்தச் செடிகள் அதிவேகமாக வளர்ச்சி பெற்றுள்ளன. எதிர் காலத்தில் இசையுடன் மின்சாரத்தையும் பாய்ச்சி பயிர்களை வளர்ச்சியுறச் செய்வது சர்வ சாதாரண நிகழ்ச்சியாக இருக்கும்.

# பனிப்போர் முடிந்துவிட்டதா?


2ம் உலக யுத்தத்துடன் ஜேர்மனியும், இத்தாலியும், யப்பானும் தோற்கடிக்கப்பட்டன; உலகம் ஒரு இராணுவ சமநிலைக்கு உள்ளானது. ஆனால் ஓர் சில வருடங்களிற்குள்ளாக இச்சமநிலை குலைந்தது. மீண்டும் ஓர் இராணுவ உலகளாவப் போட்டி ஆரம்பமானது. அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் ஒருபக்கம். சோவியத் ருஷியாவும், சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் மறுபக்கம். முன்னையது வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகள் (NATO) எனவும், பின்னையது வார்சோ (WARSAW) ஒப்பந்த நாடுகள் எனவும் அழைக்கப்பட்டது.

சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஒன்றை ஒன்று போட்டி போட்ட வண்ணம் மிகப் பெரும் இராணுவ வல்லரசுகளாக வளர்ந்து வந்தன. இப்போட்டியே பனிப்போர் என (Cold War) அழைக்கப்பட்டது. ஆனால் சோவியத் யூனியனின் உள்நாட்டுப் பிரச்சினைகளின் காரணத்தால் அந்நாடு தனது தேச எல்லைக் கப்பால் இருந்த தனது படைகளை உள்வாங்கிக் கொண்டது. வார்சோ என்ற அமைப்பும் கலைக்கப்பட்டது. சோவியத் யூனியன் ஒரு இராணுவ வல்லரசு என்னும் நிலை இல்லாது போய்விடவில்லை. அது இன்னமும் ஒரு இராணுவ வல்லரசு தான். சோவியத் யூனியனின் பாரிய இராணுவ கட்டமைப்புகள் இன்னமும் கலைக்கப்படவில்லை. அவை இன்னமும் பலமிக்கவையாகவே உள்ளன. சோவியத் யூனியன் அமெரிக்காவுடன் உலகளாவிய ரீதியில் போட்டி போடுவதற்கு ஏற்றமுறையில் உருவாக்கப்பட்டிருந்த இராணுவ வியூகங்கள் கலைக்கப்பட்டு விட்டன. இதனால் உலகைக் கவ்வியிருந்த ஒரு யுத்தக் கெடுபிடி தளர்த்தப் பட்டுவிட்டது. உலகம் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

### மீண்டும் அச்சம்

ஆனால் தொடர்ந்து ஏற்படும் சம்பவங்கள் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. 18 நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் நேட்டோ அமைப்பு இன்னமும் கலைக்கப்படவில்லை. அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய இரு நாடுகளும் இது தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. ஐரோப்பிய மக்களின் பொதுவான அபிப்பிராயமோ இது கலைக்கப்பட வேண்டும் என்பதேயாகும். சோவியத் ருஷியா ஆபத்தில் இருந்து ஐரோப்பாவை பாதுகாக்கவே நேட்டோ கூட்டு அமைக்கப்பட்டது. இன்றுநிலைமை மாறிவிட்டது. கிழக்கு ஜேர்மனி,

(15ஆம் பக்கம் பார்க்க)



# காட்சிக்காகவா வாழ்ப்பயிலவா?

பாடசாலை நூல்களைத் தவிர மாணவர்கள் வேறு எதையும் படிக்கக் கூடாது; சோதனைக்குத் தேவையானதை மட்டுமே படிக்க வேண்டும்; புலனை சோதனைக்கு வேறு பக்கம் திருப்பக் கூடாது இவைதான் கல்வி சம்பந்தமான தவறான கருத்துக்களாகும். மாறாக வாழ்க்கைக்கு மாணவர்களைத் தயாரிப்பதுதான் கல்வியின் உண்மை நோக்கமாக இருக்க வேண்டும். பல்கலைக் கழகம் புக முடியாது போன சுமார் 95% மான மாணவர்கள் எந்த ஆற்றலும் இன்றி நடுத் தெருவில் தூக்கி எறியப்படக் கூடாது. பல்வேறு விதமான தொழில் நுட்பபயிற்சிகள் இடைநிலை மட்டத்தில் இருந்தே மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாணவர்களின் ஆக்கத்திறன் அபாரமானது. இத்திறன் வெளிக்கொணரப்பட வேண்டும்.

சமீபத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலும், யாழ் மாவட்டத்திலும் இரு கைப்பொருட், தொழில் நுட்ப கண்காட்சிகள் நடைபெற்றன. கிளிநொச்சியில் நடைபெற்ற கண்காட்சி தமிழீழ ஆய்வு நிறுவனத்தாலும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கண்காட்சி கல்வித்திணைக்கள தொழில் நுட்பபிரிவாலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

கிளிநொச்சி கண்காட்சி மாணவர்களின் ஆக்கங்களையும் மாணவர் அல்லாத ஏனைய பகுதியினரின் ஆக்கங்களையும் உள்ளடக்கியிருந்தது. யாழ் மாவட்ட கண்காட்சி மாணவர்களின் ஆக்கங்களை மாத்திரமே உள்ளடக்கி யிருந்தது.

சிறிலங்கா அரசாங்கம் தமிழீழத்திற் கெதிராக சக்தி தடையையும் பொருளாதார தடையையும் விதித்திருக்கும் இன்றைய நிலைக்கு அவசியமான பல ஆக்கங்கள் காணப்பட்டன. உள்ளூரில் காணப்படும் பொருட்களை மூலப்பொருட்களாக கொண்டு, எளிமையான தொழில் நுட்பத்தைப் பிரயோகித்து குடிசைத் தொழிலாக செய்யக் கூடிய பல ஆக்கங்கள் காணப்பட்டன. மரவள்ளிக் கிழங்கு, குரக்கன், உழுந்து கௌப்பி போன்றவகைகளில் விதம் விதமான உணவுப் பண்டங்களை தயாரிக்கும் முறை; மரக்கறி வகைகளையும் ஏனைய உணவுப் பொருட்களையும் பதப்படுத்தி சேமித்து வைக்கும் முறை; பனாட்டை பயன்படுத்தி சோப் தயாரித்தல் போன்றவை இவற்றில் குறிப்பிடத் தக்கனவாகும். யுத்த அவலங்களும் பொருளாதார தடைகளும் மாணவர்களின் அழகியல் உணர்வைக் குன்றச் செய்யவில்லை என்பதற்கும் இப் பொருட்காட்சி சான்று பகர்ந்தது. வாழைநார், கடதாசி, கழித்துவிடப்பட்ட வெட்டுத்துண்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பல அலங்காரப் பொருட்களும் செய்யப்பட்டிருந்தன.

மாணவர்களின் இத் திறமைகள் காட்சிப் பொருள் ஆக்கப்பட வேண்டியதும், மதிப்பெண்கள் பெறத் தகுதியாக கருதப் பட வேண்டியதும் அவசியமானதே. ஆனால், காட்சிப் பொருளாவதும் மதிப்பெண்கள் பெறுவதும்தான் இவற்றின் நோக்கமாக இருந்து விடலாகாது. இவ்விதம் அமையுமானால் இவ் ஆக்கத்திறன் பயனற்றதாகவும், முழுமை பெறாததாகவும் மாறிவிடும். வாழ்க்கைக்கு அவனைத் தயாரிக்கும் வாழ்க்கைத் திறனாக மாறாது. அதுவும் கறிக்குதவாத ஏட்டுச் சுரக்காயாகி விடும்.

பாடசாலைகள் இவ்விதமான ஆக்கத்திறன்களை விருத்தி செய்யும் ஒரு கூடமாக மாறவேண்டுமானால் அவை சோதனைக்கும் பொருட்காட்சிக்கும் என்று மாத்திரம் உற்பத்தி செய்யக் கூடாது. வியாபாரம் செய்வது என்ற நோக்கத்திற்காகவும் அவை உற்பத்தி செய்யப்பட வேண்டும். பாடசாலையில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட குடிசைத் கைத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். இவ்வித சங்கங்கள் தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை தமது பாடசாலைக்குள்ளும் வெளியிலும் விற்பனவு செய்ய வேண்டும்.

இவ்விதமான கூட்டுறவு சங்கங்கள் மாணவர்களின் ஆக்க சக்தியை வளர்ப்பதுடன் அவர்களை வாழ்க்கைக்கு தயார்படுத்த உதவும். அத்துடன் பொருளாதார தடையை வெல்வதற்கு மாணவர்களை அணிசேர்க்கவும் உதவும்.

கல்வி ஆர்வலர்களும், தேச நலன் விரும்பிகளும் இதைக் கவனத்திற் கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

## மாணவர் செய்தவை

### மனிதனும் ஒரு புத்தகமே !

புத்தகங்களை மட்டும் படிப்பது சமுதாய வாழ்விற்குப் போதாது. நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களையும் படிக்கவேண்டும். சமுதாய வாழ்விற்கு இது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மனிதனும் குழப்பங்கள் நிறைந்த ஒவ்வொரு புத்தகமாகும்.

— ஓர் அறிஞர்

கற்பகமாம் பனைமரத்தின் கனிவுமிக்க பாளையிலே அற்புதமாய்ச் சொட்டுகின்ற பதநீர் அமிர்தம் போன்றது நாம்இதைகருப்பநீர் என்றும் அழைக்கிறோம். இந்தியாவில் இதனைப் பனை அமிர்தம் என்றும் அழைக்கிறார்கள்.

ஆண்பனை, பெண்பனை ஆகிய இரண்டிலும் பதப்படுத்தப்பட்ட பாளையிலே சொட்டுகின்ற நீர் இனிப்பாகவே இருக்கும். அது வடிந்து நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்களின் பின்பே புளிப்படைகிறது. (கொதித்தல்). அதையே 'கள்' என்கிறோம். அப்படிக் கள்ளாக மாற்றமடையாது ஈஸ்ட் உருவாகாது தடுக்கவே அதைச் சேர்க்கும் கலையங்களில் நீறிய சுண்ணாம்பைத் தடவுகின்றனர். இச்சுண்ணாம்பு பதநீரைப் புளிப்படையாமல் சுமார் 28-30 மணித்தியாலங்கள் காக்கவல்லது.

இப் பதநீரில் இருந்து பனம்பாகு, பனஞ்சீனி, பனைவெல்லம், பனங்கற்கண்டு போன்ற பலவகை உணவுப்பொருட்களை நாம் உற்பத்தி செய்து இக்காலத்தில் பாவிப்பது எமது பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் வேண்டியதாகும். அல்லாமலும் பதநீரை நேரடியாக நாம் பருகுவது பல வழிகளிலும் எமக்கு சிறந்ததாகும்.



# பதநீர் பருகுவீர்

மட்டுவில் க. வைரமுத்து

இது நீண்ட ஆயுளைத் தரக்கூடிய அமிர்தம் போன்றது, பதநீரில் அப்படி என்ன இருக்கிறதென்று ஆராயவேண்டியது அறிவியலாளரின் கடமையாகும். இதில் அடங்கியுள்ள உயிர்சத்து 'B' கலவை இரத்த விருத்தி செய்கிறது. த்யாமின் இரத்த அணுக்களை வலுப்படுத்துகிறது. சீனிச்சத்து உடலுக்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கிறது. பொஸ்பரஸ் மூளையைவலுவடையச் செய்கிறது உடலைக் குளிர்ச்சியடையச் செய்து, இருமல் கண்ணோய் முதலியன வராமல் காக்கவல்லது. எனவேதான் நம் முன்னோர் பதநீரை அமிர்தம் என்றும், பனையைக் கற்பகம் என்றும் அழைத்தனர்,

பதநீர் விஞ்ஞான ரீதியாகப் பரிசீலிக்கப்பட்டுள்ளது. பள்ளிப்பிள்ளைகள் தொடர்ந்து 6 மாதகாலங்கள் எட்டு அவுன்ஸ் பதநீர் பருகிவந்தால் அவர்களின் எடை கூடுகிறது. உயரம் அதிகரிக்கிறது. வாய்ப்புண், கண்வியாதி குணமடைகிறது. அவர்கள் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது. இவை நிருபணம் செய்யப்பட்டுள்ளன.

நமது நாட்டிலுள்ள பனைத்தொழில் வல்லுநர்களும் தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களும் உணவுப்பஞ்சம் மிக்க இக்காலத்தில் பனை உற்பத்திகளை உணவுக்கும், நாட்டுச் சிறார்களை உறுதியுள்ளவர்களாக வளர்ப்பதற்கும் பயன்படுத்தப் போகிறார்களா? அன்றி குடிகாரர்களை ஊக்குவிக்கப்போகிறார்களா? நமது தொழில் வல்லுநர்களும் சங்கங்களும் கள்ளைப் பெருக்குவதற்குப் பதிலாக பதநீரை உற்பத்தி செய்து பாடசாலைப் பிள்ளைகள் யாவருக்கும் விநியோகிக்கவேண்டிய ஆயத்தங்களைச் செய்வதுடன் அதைச் சார்ந்த உற்பத்திக்கான பாகு, சீனி, வெல்லம், கற்கண்டு முதலிய உற்பத்திகளை மேற் கொண்டு நாட்டுக்கு உதவ வேண்டும் என்பது எமது அவா.



# வன்முறையின் பலிக்கடாக்கள்

பெண்களுக்கு எதிரான பாலியல், வலிந்து தாக்குதல்கள் என்பன சமூக அமைதியைக் குலைக்கும் ஒரு பொது வழமையாய் இருக்கும் அதே வேளையில், அவைகள் அதிகரித்த வண்ணமாகவே உள்ளன. ஆனால் அவைகள்தான் குற்றவியல் நீதித் துறையில் மிகக் குறைவாக முறைப்பாடு செய்யப்படும் வழக்குகளாய் உள்ளன.

ஒவ்வொரு மணித்தியாலத்திலும் 16 பெண்கள் காமுகர்களுடன் மோதுகிறார்கள். ஒவ்வொரு 6 நிமிடத்திற்கும் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாகிறாள்.

ஒவ்வொரு வருடமும் 30தொடக்கம் 40 லட்சம் பெண்கள் நையப் புடைக்கப் படுகிறார்கள். ஒவ்வொரு 18 செக்கன்களுக்கும் ஒரு பெண் அடிக்கப்படுகிறாள்.

நான்கு பெண்களில் மூன்று பெண்களாவது தமது வாழ்நாளில் குறைந்தது ஒரு வன்முறைக்காவது பலியாகிறாள்.

ஒவ்வொரு வருடமும் 10 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் கடுமையாக நடத்தலுக்கான காயங்களிற்காக வைத்திய சிகிச்சை பெறுகிறார்கள்.

ஐக்கிய அமெரிக்காவின் (U.S) பாலியல் வன்முறை வீதம் பிரித்தானியாவை விட 13 மடங்கு கூடியது. ஜேர்மனியைவிட கிட்டத்தட்ட நான்கு மடங்கு கூடியது. ஜப்பானைவிட 20 மடங்கு கூடியது.

(அமெரிக்க நீதிபரிபாலான குழலினால் தொகுக்கப்பட்டது- Newsweek June16 1990)

## அமெரிக்கப் பெண்கள்

சிக்காகோ நகரின் இலிநொயில் பல்கலைக் கழகத்தின் பெண்கள் கல்விக்குப் பொறுப்பான ஸ்ரெயின் றிபெற் கூறியதாவது. ''பெரும்பான்மையான பெண்களுக்கு பயம் வாழ்க்கையின் ஒரு யதார்த்தமாய் உள்ளது. பெண்கள் தமது வாழ்க்கையை கட்டுப்படுத்தவும் தாம் செய்யவேண்டிய பல விடயங்களை விட்டுக் கொடுக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.'' அவர் மேலும் தொடர்வதாவது'' அவர்கள் அவ்விதம் நடந்துகொள்ளாது விட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளானவர்களானால், அதற்கான காரணம் அப்பெண்கள் தான் என்றே கருதப்படுகிறது. சரியாக சொல்வதானால் தாம் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு விடுவோமோ என்ற பயம் ஆண்களுக்கில்லை''

கொன்ருகி பல்கலைக்கழக சட்ட பேராசிரியர் ஒரு பரிசோதனையை நடத்தும் போது, பாலியல் தாக்குதல்களில் இருந்து உங்களை எவ்விதம் பாதுகாத்துக் கொள்கிறீர்கள் என பெண்களைக் கேட்டார். அவர்கள் மிகச் சர்வசாதாரணமாக பின்வரும் கருத்துக்களைப் பகன்றார்கள்.

''இரவு நேர கடைக் கண்ணிகளைத் தவிர்ப்போம்; ஆள் நடமாட்டம் அதிகமாய் உள்ள நேரங்களிலேயே பொது நூலகங்களைப் பயன்படுத்துவோம்; எவ்விதமான காலநிலையாய் இருந்தாலும் சாளரங்கள் திறந்த நிலையில் துகில் கொள்ளமாட்டோம்.

ஆனால் இதே கேள்வி ஆண்களை நோக்கி கேட்கப்பட்டபோது ஆண்கள் இக் கேள்வியையிட்டு திகைப்படைந்து அமைதியையே பதிலாகத் தந்தார்கள்.

(நியுஸ் வீக், ஜூலை, 1990)

# சிவவாக்கியார்

மதத்தின் பேரால் நடைபெறும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நிராகரிப்பவனை, சாதிபேதம் பார்ப்பது தவறு எனக் கண்டிப்பவனை, வாழ்க்கையை வெறும் மாயையாகக் கூறுவதை மறுப்பவனை, இன்னமும் எமது சமூகம் ஏதோ வேண்டாத ஒருவனைப் பார்ப்பது போலவே நோக்குகிறது; புரட்சிக்காரன் என்கிறது; நாஸ்தீகன் என்கிறது; தீவிரவாதி என்கிறது; இன்னும் பற்பலவும் சொல்லி அவனை ஒதுக்கிவைக்கக் கூடிய நாமங்களை அவனுக்குச் சூட்டுகிறது. இவ்விதம் பேசுபவன் நமது கலாசாரத்திற்கு எதிரானவன் என்று சமூகத்தினால் குற்றஞ் சாட்டப்படுகிறான். இதுவரை காணாத ஒரு புதிய கருத்தைப் பேசுகிறான் என்று நையாண்டி செய்யப்படுகிறான்.

எமது வரலாற்றைப் பின்நோக்கிப் பார்ப்போமானால் இவ்விதமான கருத்துக்கள் எமது கலாசாரத்திற்குப் புதியவையல்ல என்பது புரியும். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சிவவாக்கியர் உட்பட பல சித்தர்கள் இவ்விதமான கருத்துக்களை மிக ஆணித்தரமாக எடுத்தியம்பியிருக்கிறார்கள். சிவவாக்கியரின் சில செய்யுள்களை இங்கே தருகிறோம். இவர் ஒரு சிவ பக்தர்; நிறைந்த இறைபக்தியாளன் என்பது இங்கு நினைவிருத்தப்பட வேண்டும். அதாவது இவர் ஒரு நாஸ்தீகன் அல்ல.

அந்தநாள் தொட்டு இந்த நாள்வரை நிலவிவரும் மறுபிறப்பு பற்றியும், இன்னும் பல மூடநம்பிக்கைகள் குறித்து அவர் பாடியது—

பழந்தமிழ் பெரியோர் வரிசை

''கறந்த பால் முலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
துடைந்துபோன சங்கின்ஓசை உயிர்களும் உடற்புகா
விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே''

''மீன் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மீன் இருக்கும் நீரலோ மூழ்வதும் குடிப்பதும்
மான் இறைச்சி தின்றதில்லைஅன்றும் இன்றும் வேதியர்
மான் உரித்த தோலல்லோ மார்பில்நூல் அணிவதும்''

''கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்றது ஏதடா
வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறையையே''

''பேய்கள் பேய்கள் என்கிறீர் பிதற்றுகின்ற பேயர்கான்
பேய்கள் பூசை கொள்ளுமோ பிடாரி பூசை கொள்ளுதோ
ஆதிபூசை கொள்ளுமோ அனாதிபூசை கொள்ளுதோ
காயமான பேயல்லோ கணக்கறிந்து கொண்டதே.''

''என்னகத்துள் என்னைநான் எங்குநாடி ஓடினேன்
என்னகத்தில் என்னைநான் அறிந்திலாத தாகையால்
என்னகத்துள் என்னைநான் அறிந்துமே தெரிந்தபின்
என்னகத்துள் என்னையன்றி யாதுமொன்றும் இல்லையே''

''நட்ட கல்லைத் தெய்வம்என்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லும்மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன்உள் ளிருக்கையில்?
சுட்டசட்டி சட்டுவம் கறிசுவை அறியுமோ?''

''உச்சிகண்டு கண்கள்கட்டி உண்மை கண்டது எவ்விடம்
மச்சுமாளி கைக்குளே மானிடம் கலப்பிரேல்
எச்சிலான வாசல்களும் ஏகபோகம் ஆய்விடும்
பச்சைமாலும் ஈசனும் பரந்ததே சிவாயமே.'

- மச்சுமாளிகை – உடம்பு
எச்சிலான வாசல்கள் - ஐந்திரியங்கள்.
எமக்குள் மனிதநேயத்தை வளர்த்திடுவோமானால் எம்மை நாம் கட்டுப்படுத்தல் சுலபமாகிவிடும் என்பதே இதன் அர்த்தம்.

''சாதியாவது ஏதடா சலம்திரண்ட நீரலோ
பூதவாசல் ஒன்றலோ பூதம்ஐந்தும் ஒன்றலோ
காதில்வாளி காரைக்கம்பி பாடகம்பொன் ஒன்றலோ
சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே''

- சலம்திரண்ட நீரலோ - ஏரி, குளம், ஆறு என்று பலபெயரில் இருந்தாலும் எல்லாம் நீர்தான்.

நிலம், நீர், ஆகாயம், நெருப்பு, காற்று ஆகிய ஐம்பெரும் பூதங்களும் ஒன்றேயாகும் - (அந்நாளின் இயற்கை அறிவியல் வளர்ச்சியின்மையைக் காட்டுகின்றது)
வாளி, காழை, கம்பிபாடகம் - தோட்டின் மறுபெயர்கள் வெவ்வேறு பெயரால் அழைக் கப்பட்டாலும் தோடு பொன்னால் ஆக்கப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

உண்மைக் கதை

# நிறைவேறாத சதி



இருபத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன் பொலிவியக் காடுகளில் படுகொலை செய்யப் பட்ட சேகுவேராவின் 63 வது பிறந்த நாள் இவ்வாண்டு யூன் 14.

அதனையொட்டி அவரது வீரமான போராட்டத்தினை நினைவு கூர்ந்து அவரது கவிதையும் அவர் பற்றிய ஒரு உண்மைக் கதையும் இங்கு பிரசுரமாகிறது.

**1967** ஒக்டோபர் 8

பொலிவியாவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள எல் ஜுறோ பள்ளத்தாக்கு.

மதியந் தாண்டிய கதிரவனின் வெப்பக் கதிர்கள் வெளியுலகுக்கு வெளிச்சமூட்டிக் கொண்டிருக்க, உயர்ந்த செங்குத்துப் பாறைகளும் அடர்ந்த பெரும்பற்றைப் புதர்களும் கதிரவனின் கதிர்களுக்குத் தடைவேலி போட்டிருப்பதால் இப் பள்ளத்தாக்கு முழுவதும் [illegible] இருள் சூழ்ந்த மாலைப்பொழுது போல் காட்சியளிக்கின்றது.

இளந்தாடியுடன் ஒரு கல்லின் மேல் ஒருவர் உட்காந்திருக்கிறார். ஆஜானுபாகுவான தோற்றம்.

அவர் தான் சே குவேரா. உலகம் பூராவிலும் ஏகாதிபதியத்தின் கைப்பொம்மை அரசுகளுக்கு எதிராகப் போராடும் கொரில்லாப் போராளிகளின்மான சீகத்தலைவர்.

தனது தினக்குறிப்புப் புத்தகத்தில் அன்றைய குறிப்பை எழுதிக் கொண்டிருக்கிறார்.

சிவா சுப்பிரமணியன்

''விடியற்காலை ஐந்து மணிக்கு மங்கிய நிலவொளியில் நாங்கள் புறப்பட்டோம். எங்கள் பிரயாணம் மிகுந்த சிரமமானதாக இருந்தது கணவாயைக் கடக்கையில் பல சுவடுகளை விட்டு வந்துள்ளோம். இரண்டு மணியளவில் சிறிதுநேரம் ஓய்வெடுப்பதற்காகத் தங்கினோம். தொடர்ந்து பிரயாணம்செய்வதில் எவ்வித பலனும் இல்லை எனப் பின்னர் தீர்மானித்தோம்....''

சே குவேராவுக்கு அருகில் அவரது போராட்டத் தோழர்கள் - எல்லோரும் ஆயுதங்களுடன்,

கியூபாவில் பிடல் காஸ்ரோவுடன் சேர்ந்து அந்நாட்டின் விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திய சேகுவேரா அங்கு தன் கடமை முடிந்ததும் 1966-ம் ஆண்டு பிற்பகுதியில் பொலிவியாவின் அமெரிக்கக் கைப் பொம்மை அரசுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்தார்.

இந்தப் போராட்டத்தின் தடங்கள் அவரது மனத்திரையில் தோன்றி மறைந்தன.

## வரலாறு

வெற்றிகளும் தோல்விகளும் மாறி மாறித் தோன்றின. தாயக மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகப் போராடி மடிந்த மாவீரர்களின் முகங்கள் தோன்றி மறைந்தன.

இன்றைய இந்த நிலைக்குக் காரணமான துரோகிகளின் முகங்களும் தோன்றி மறைந்தன.

சே குவேரா என்ற பெயர் அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனம். சில துரோகிகளின் மூலம் அவர் மறைந்து வாழ்ந்த பிரதேசத்தைத் தெரிந்துகொண்ட சி. ஐ ஏ அவரைத் தீர்த்துக்கட்ட 'ஒப்பறேஷன் சிந்தியா' என்ற பாரிய திட்டத்தை தீட்டியது. பொலிவிய இராணுவத்துக்கு உதவியாகப் பனாமாவிலிருந்து ஆயிரக் கணக்கானபடையினர் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர்.

இத்திட்டத்தின் இறுதிக்கட்டம் நெருங்கிக் கொண்டிருப்பது சே குவேராவுக்கு புரிந்தது.

''எங்களைச் சுற்றிவிரிக்கப்பட்ட வலை நன்றாகச் சுருங்கி வந்துவிட்டது. எதிரி எங்களை நெருங்கிக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் நாங்கள் இங்கிருந்து மேலும் முன்னேற முயற்சிப்பதில் அர்த்தமில்லை. இங்கேயே இறுதிப் போரைச் சந்திப்போம்.''

சே குவேராவின் இக் கருத்தை அவரது தோழர்களும் ஏற்றுக் கொண்டனர்.

அவர்கள் எதிர்பார்த்த இறுதிப் போர் ஒரு மணித்தியாலத்துக்குள்ளேயே அவர்களைத் தேடி வந்தது.

ஹிகுவேரா என்ற கிராமத்திலுள்ள ஒரு சிறிய பாடசாலை.

சீருடை அணிந்தவர்களும் சாதாரண உடையிலுள்ளவர்களுமாகப் பலர் காணப்படுகின்றனர்.

''இதுதான் கப்டன் அந்த டயறி''

கேணல் ஜோகின் ஸென்டனோ ஒரு தினக்குறிப்புப் புத்தகதை பீலிக்ஸ் றமோஸ் என்ற சி. ஐ. ஏ அதிகாரியிடம் கொடுக்கின்றார்.

பீலிக்ஸ் றமோஸ் ஒரு அமெரிக்கப் பிரசை ஆனால் பொலிவிய இராணுவத்தில் கப்டன் அந்தஸ்து வழங்கப் பட்டிருக்கின்றது.

எல் ஜுறோவில் முதல் நாள் நடந்த சண்டையின் போது கைது செய்யப்பட்ட சே குவேராவிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அத் தினக்குறிப்புப் புத்தகம். பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பதற்கு முன்பேஅதை மையமாக வைத்து பீலிக்ஸ் றமோஸ் ஒரு சதித்திட்டத்தை உருவாக்கிவிட்டான்.

சே குவேராவை ஒரு கொள்ளைக் காரனாகவும் பேராசைமிக்க சுயநலவாதியாகவும் காட்டும் வகையிலும், உலக விடுதலை இயக்கங்களை இழிவு படுத்தும் வகையிலும்



சேகுவேரா, மனைவி பிள்ளைகளுடன்

அத்தினக்குறிப்பைத் திரிபுபடுத்தி வெளியிடுவதே அவனது திட்டம்

''இந்த டயறி என்னிடமே இருக்கட்டும்''

''நீதி விசாரணைக்கான ஆவணமாக இது தேவைப்படாதா?''

''நீதி விசாரணை என்ற கதையே கூடாது. இவன் சாதாரணமானவன் அல்ல. உலகின் கண்களுக்கு உங்கள் எல்லோரையுமே குற்றவாளிகளாக்கி விடுவான்''.

அதை அங்கீகரிப்பது போல கேணல் ஸென்டனோவின் தலை மேலும் கீழும் பொதுவாக அசைகின்றது.

இருவரும் அவ்விடத்தை விட்டு நகர்கின்றனர்.

காலில் பலத்த காயத்துடன் கைகள் பின்புறம் விலங்கிடப்பட்ட நிலையில் வெறுந்தரையில் மல்லாந்து கிடக்கும் சே குவேராவிடம் றமோஸ் கேள்வி மேல் கேள்வி கேட்கிறான்.

பதில் இல்லை.

ஸென்டனோவும் ஒரு சிப்பாயும் அருகில் நிற்கின்றனர்.

''இவனோடு நேரத்தை செலவிடுவதில் பிரியோசனமில்லை கேணல்''

பீலிக்ஸ் றமோஸ் அவ்விடத்தை விட்டுச் செல்ல...... ஸென்டனோ அருகில் நிற்கும் சிப்பாயைப் பார்த்துச் சைகை காட்ட........ அவனது கைத்துப்பாக்கி விலங்கிடப்பட்டுக் கிடக்கும் சே குவேரா மீது குண்டுகளைப் பொழிகிறது.

❀ ❀ ❀

சே குவேரா படுகொலை செய்யப்பட்டுக் கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களாகி விட்டன.

(18ஆம் பக்கம் பார்க்க)

## பனிப்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

போலாந்து போன்ற நாடுகள் மேற்குலகின் அங்கத்துவ நாடுகளாகி விட்டன. ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் ருஷ்சியாவின் நட்புறவை தளர்த்திக் கொண்டு விட்டது. ஐரோப்பிய எல்லையோர சோவியத் குடியரசுகள் (லிதுவேனியா, மொல்டோவியா, போன்றவை) கூட தனித்து செல்ல கோருகின்றன. இந்த நிலையில் எதற்காக நேட்டோவும் பிரித்தானியாவும் நேட்டோவை பலப்படுத்த விரும்புகின்றன?

வளைகுடா விவகாரத்தில் சில அரேபிய நாடுகள் கண்துடைப்பாக சேர்த்துக் கொள்ளப்பட்டா லுங்கூட அமெரிக்காவின் தலைமையின் கீழான நேசநாடுகள் என்பது உண்மையில் நேட்டோ அணி நாடுகளாகவே இருந்துள்ளன. உத்தியோக பற்றற்ற முறையில் நேட்டோ அணியே இங்கு செயற்பட்டு வந்தது. நேட்டோ அணியின் கிழக்கு பக்கவாட்ட அங்கத்துவ நாடான துருக்கியை பாதுகாப்பது என்ற மறைமுக பிரச்சாரத்தின் கீழேயே நேட்டோ வட மேற்கு அங்கத்துவ நாடுகள் இணைத்துக் கொள்ளப்பட்டன. குர்டிஸ் அகதிகளுக்கு உதவும் விடயத்திலும் நேட்டோ அணியே துரிதமாக செயற்பட்டு வருகிறது. இஸ்ரேலையும் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்து மத்திய கிழக்கு விவகாரங்களை 'நேட்டோ' தனது கைகளில் எடுக்க முயற்சிக்கின்றது. ஐ. நா. சபையை ஒரு கைப்பொறிப்பு முத்திரையாக (Rubber Stamp) வைத்திருப்பதற்கு 'நேட்டோ' அமைப்பு இரகசியமாக செயற்படத் தொடங்கியுள்ளது.

முழு உலகையும் தமது ஆட்சியின் கீழ் கொணரும் ஒரு இராணுவ கூட்டமைப்பாக நேட்டோ உருவாகி வருகின்றது. பொருளாதார ரீதியில் முன்னேறி வரும் ஜப்பானையும் கூட தனிமைப் படுத்துவதே இதன் நோக்கமாகும். 2ம் உலக யுத்தத்தின் போது நாஸிஸ்ட் ஜேர்மனியின் தலைமையில் ஒரு பாஸிஸ்ட்-நாஸிஸ்ட் கூட்டணி உருவானதுபோல், இராணுவ வல்லரசுகளான அமெரிக்கா பிரித்தானியாவின் தலைமையில் புதியதோர் இராணுவ கூட்டு உருவாகின்றதா? என்றே சிந்திக்க வேண்டியுள்ளது.

**லோகன்**

## போட்டிகளும் விடைகளும்

சாளரத்தில் வெளியாகும் போட்டிகளுக்கான விடைகளும், வெற்றியீட்டியோர் பற்றிய விபரங்களும் ஒன்று விட்டு ஒருமாதமே பிரசுரமாகும். அதாவது இந்த இதழில் பிரசுரமான போட்டிக்குரிய பதில்கள் அடுத்த இதழில் வெளிவராது. அதற்கடுத்த இதழிலேயே வெளியாகும்.

தற்போது நிலவும் போக்கு வரத்து, தபால் விநியோகம் போன்றவை ஒழுங்கில்லாமையினால் சாளரத்திற்கு வரும் கடிதங்கள் தாமதமாகவே கிடைக்கின்றன. இதற்காகவே இந்த ஏற்பாடு.

## சிவவாக்கியர்..

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

''மாதர்தோள்சே ராததேவர் மானிலத்தில் இல்லையே!
மாதர்தோள் புணர்ந்தபோது மனிதர்வாழ் சிறக்குமே,
மாதராகுஞ் சக்தியொன்று
மாட்டிக்கொண்ட தாதலால்
மாதராகும் நீலிகங்கை மகிழ்ந்து கொண்டான்
ஈசனே.''

குடும்பவாழ்க்கையை வெறுப்பது தவறு என்கிறார்.

இவ்விதமான பல கருத்துக்கள் உள்ளன. இப்பெரியோர்களால் தொடக்கி வைக்கப்பட்ட கருத்துப் போராட்டம் இன்னமும் முடிவடையவில்லை. இவர்களை அனைத்து வழியிலும் அறிவியற்பார்வை பெற்றவர்கள் என்பதில்லை. ஆனால் அத்திசை நோக்கி காலடி எடுத்து வைத்த மூதாதையர்களாகும்.

## அறிவியற் கேள்விகள்

1. யாரும் போலியாக அழுதால் முதலைக்கண்ணீர் விடுவதாக கூறுகின்றோம் இந்த முதலைக்கண்ணீர் என்பது என்ன?
2. ''உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு'' என்பது ஒரு முதுமொழி. உணவின் அளவிலும், தன்மையிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏதாவது வேறுபாடுகள் அவசியமா? காரணத்தோடு பதில் தருக?
3. வளிமண்டலத்தில் ஓசோZன் எவ்விதம் தோன்றுகிறது?
   வானம் நீல நிறமாய் உள்ளதற்கும், ஓசோZன் வாயுக்களுக்கும் ஏதாவது தொடர்புகள் உண்டா?
4. சிறிய பல்லி வழவழப்பான சுவரிலோ அல்லது கூரையிலோ கீழே விழாமல் எப்படி ஓட முடிகிறது? அது எப்படி விழாமல் இருக்கிறது?
5. ஒரு பொருளின் மேற்பரப்பு தண்ணீரால் ஈரமாக்கப் படுகிறது என்று கூறப்படும்போது அங்கு நடைபெறுவதென்ன?



விவேக்

இந்த மண்ணின் எல்லைப் பகுதியொன்றை சென்று பார்வையிடும் சந்தர்ப்பமொன்று அண்மையில் கிட்டியது.

எந்தக் கணத்திலும் எதிரிகளிடமிருந்து ஆபத்து நேரலாம் என்பதை நன்குணர்ந்தும் மண்மீதுள்ள தீவிர காதலினால் அந்தமண்ணை பற்றிப்பிடித்துக் கொண்டு வாழும் மக்களை அங்கு சந்திக்க முடிந்தது.

அந்தமக்களுடன் பழகி உரையாடிய அனுபவத்தினை மீட்டுப்பார்க்கும்போது மனதிற்குள் மகிழ்ச்சிப் பூக்கள் விரிகின்ற போதிலும் –

மெல்லிய சோகமொன்றும் மெல்லப் படர்கின்றது.

பழுதாகி குன்றும் குழியுமாக நெளியும் பாதைகள்; வீதிகள்.

உடைந்து உருக்குலைந்து காணப்படும் சிறுசிறு கட்டடங்கள்;

காற்றில் படபடக்கும் ஓலைக் குடிசைகளுக்குள் வறுமை இருள்சூழ வெளிச்ச எதிர்பார்ப்புக்களை சுமந்து வாழும் மக்கள்.

இதுதான் அந்த எல்லைப்புறம். மணலாறு மாவட்டம்.

விவசாயம், மீன்பிடி இன்னும்பல வளங்கள் நிறைந்த பிரதேசமாக திகழ்ந்த இந்தமண் எதிரியின் ஆக்கிரமிப்பால் இப்படி அலங்கோலப் படுத்தப்பட்டுள்ளது.

அங்கே - அறுபது, அறுபத்தைந்து வயதான முதியவர்கள் கூட தோள்களில் ஆயுதங்களைச்சுமந்து திரிவதைப்பார்க்க வியப்பாக இருந்தது.

அவர்கள் அந்த மண்ணில் பிறந்தவர்கள். அந்த மண்ணைப்பாதுகாக்க இந்த வயதிலும் துப்பாக்கி ஏந்தியுள்ள துணைப்படையினர்.

முதுமையின் முகவரி முகங்களில் தெரிய விடியலின் முகவரியை விசாரித்துதிரியும் அந்த முதியவர்களை சந்தித்துப் பேசினேன்.

அங்குள்ள மக்களின் தினசரி வாழ்வுநிலை, எதிர்நோக்கும் வறுமைநிலை. இந்தநிலையிலும் அந்த மண்ணை விட்டுஅகலாமைக்கான காரணங்கள் என்பவற்றிற்கு தீர்க்கமான பதில்கள் எனக்குக்கிடைத்தன.

எனது கேள்விகளுக்குக் கிடைத்த விடைகள் மனதிற்குள் புதிய கேள்விகளை உருவாக்கின.

அங்குள்ள விவசாயிகளின் வயல் நிலங்கள் எல்லாம் பறிபோய் விட்டன. ஆடுமாடுகள் கூட எதிரிகளால் அபகரிக்கப் பட்டுவிட்டன.

உழுதுவாழ நிலங்களில்லை. உழைப்பதற்கு தொழில்களில்லை. அதனால், ஒருவேளை உணவும் ஒழுங்காக அவர்களுக்கு உண்ணக்கிடைப்பதில்லை.

இருப்பினும் -
என்றாவது ஓர்நாள் தங்கள் உடமைகள், உரிமைகள், மீட்கப்படும் என்கிற நம்பிக்கை மட்டும் அவர்களிடம் குடிகொண்டுள்ளது.

அவர்கள் அந்த மண்ணைவிட்டகலாமைக்கு அந்த நம்பிக்கை தான் காரணம்.

''எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். இழப்பதற்கென்று இனி எதுவும் இல்லை. இழந்தவற்றை மீட்பதற்கான உறுதிமட்டுமே எம்மிடமுள்ளது. இறப்பதெனினும் இந்த மண்ணிலேயே இறப்போம்''

வறண்டு போயிருந்த தொண்டைவழியாக வெளிவந்த செழுமையான உறுதியான வார்த்தைகள் இவை.

அவர்களின் வறுமை நிலையோடு இணைந்துள்ள உறுதி நிலையை எழுதுவதற்கு வார்த்தைகள் இல்லை.

நண்பர் ஒருவர் என்னை ஒரு பற்றைக்குள் அழைத்துச் சென்றார். முட்கள் சூழ்ந்திருந்த அந்தப் பற்றைக்குள் புகுந்து செல்வது கடினமான காரியமாக இருந்தது.

அதற்குள் படர்ந்திருந்த ஒரு வித கொடியைக் காட்டி இங்குள்ள வறிய மக்களின் வயிற்றை பல சமயங்கள் இதுதான் நிரப்புகின்றது, என்று சொன்னார்.

அதிர்ச்சியாக இருந்தது.

இது எப்படி உணவாகும்?

அந்த தாவரத்தின் பெயர் அல்லைக்கொடியாம். ஆழமாகத் தோண்டினால் அதன் வேர்களில் சிறுசிறு கிழங்குகள் காணப்படுமாம். இவைதான் அவர்களின் பசிக்கு உணவாகிறதாம். அவர் சொன்னார்.

அந்த எல்லைப்புறத்து மக்களைப் போலவே அங்குள்ள இயற்கைச் சூழலும் அமைந்துள்ளன.

நாயாற்றுக் கடல் ஓர் மெல்லிய இசையை இசைத்துக் கொண்டிருக்க அதன் அலைகள் கரைகளில் மோதி மேலுயர்ந்து அந்த மக்களின் மனவுறுதியை ஞாபகப் படுத்தின.

சோகக் கவிதைகளாக அசைந்து கொண்டிருந்த காட்டு மரங்கள் வானைத் தொட முயன்று கொண்டிருந்தன.

❀

ஒப்பிட்டுப் பார்ப்போம் -

வறுமையின் எல்லையில் நின்று நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் மக்கள் ஒரு புறம். சொந்த சுகவாழ்வுக்காக நாட்டின் எல்லையைக் கடந்து ஓடும் கூட்டம் இன்னொரு புறம்.

மண்ணுக்காக மரணத்தை நாளாந்தம் எதிர்நோக்கி எல்லையில் காவல் நிற்கும் மக்கள் ஒருபுறம். தனிப்பட்ட நலனுக்காக ஆபத்துக்களையும் சிந்தியாது வவுனியா இராணுவ எல்லையை கடக்கும் கூட்டம் இன்னொரு புறம்.

இராணுவ எல்லைக்கு எதிரே துணிச்சலுடன் வாழும் மக்கள் ஒருபுறம்.

அடிமைச் சுகங்களுக்காக மிதிவெடிகள் மத்தியில் நடந்து செல்லும் இவர்கள் இன்னொருபுறம்.

எப்படி இருக்கின்றன இந்த வித்தியாசங்கள் ......!

பாரதியின் வரிகள் தாம் மனதில் வருகின்றன.

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி - கிளியே
செம்மை மறந்தாரடி.

(இன்னொரு முற்றத்தில் இன்னும் ...)

# உனது இரவுகள்

நிலவொளி படராத
மௌன இரவுகள்
மனங்களில் பயத்தினை விதைக்கும்.

குப்பி விளக்குடன் போராடி
உன் விழிகள்
கரையும்.

கட்டப்பட்ட மாடு போன்று
வட்ட எல்லைக்குள் உன்
மேய்ச்சல் தொடரும்.

கீறல் விழுந்த இசைத்தட்டாக
பாட வரிகள்
பதியும் மனதில்.

தொலைவில் ஏதோ
ஓசைகள் கேட்க
அம்மா உன்னை
அநட்டுவாள்.

புத்தகவரிகளுள்
புதைந்து போனதில்
உன்
காதுகள் கூட
காணாமல் போயிருக்கும்.

அந்த இரவில் -
உனது பள்ளிக்கூடம்
தகர்க்கப்பட்டிருக்கும்:

அந்த இரவு -
உன் நண்பர்கள் இருவர்
தொலைந்து போயிருப்பர்.

அன்றிரவு —
உன் பரீட்சை கூட
தடை செய்யப்பட்டிருப்பதாக
அறிவிக்கப்பட்டிருக்கும்.

அடுத்த நாள்
பகலுக்குப் பிறகே
இவை உனக்குத் தெரியவரும்!

— புவி —

## உண்மைக் கதை..:

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிவியாவின் உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் அன்ரோனியோ ஆர்குவெடஸ் தனது அலுவலக அறையில் இருக்கின்றார்.

இவருக்கு முன்னல் மேசையில் ஒரு பெரிய மஞ்சள் நிறக் கவர் பிரிக்கப்பட்டுக் கிடக்கின்றது.

சற்று முன்னர்தான் அமெரிக்கத் தூதகரத்தைச் சேர்ந்த ஹியூகோ முறே அதைக் கொண்டு வந்து கொடுத்தான். சேகுவேராவின் தினக்குறிப்பினதும் ஏனைய கெரில்லா ஆவணங்களினிதும் புகைப் படப் பிரதிகள் அதனுள் இருப்பதாக அவன் சொல்லியிருந்தான்.

தினக்குறிப்பினது புகைப்படப் பிரதியின் பக்கங்களை ஆர்குவெடஸ் புரட்டுகிறுர்.

அது தொடர்பான சீ. ஐ. ஏ யின் திட்டத்தை அவர் அறிவார். அவரது மனதில் வேறொரு திட்டமும் முளைவிடுகின்றது.

சீ. ஐ. ஏ யைப் பொறுத்த வரையில் ஆர்குவெடஸ் அவர்களின் கையாள். ஆனல், அவரோ சீ. ஐ. ஏ மீது வன்மம் கொண்டிருக்கும் ஒருவர்.

விமானப் படைக் கப்டனுக இருந்த ஆர்குவெடஸ் அக்காலத்தில் இடதுசாரி எனக் கருதப்பட்டவர். விமானப்படைத் தளபதியான றெனே பாரியன்ரொஸ் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதும் பிரதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டார். சீ. ஐ. ஏ இவரது நியமனத்தை அங்கீகரிக்காததால் நாற்பது நாட்களுக்குள் பதவி விலகினார். தங்களுடன் ஒத்துழைக்க உடன் பட்டால் அமைச்சராக்குவதாக சீ ஐ. ஏ கூறியது. இவரும் சம்மதித்தார். ஆர்குவெடஸ் ஆரம்பத்தில் இடதுசாரியாக இருந்தவரென்பதால் பல பொய்யறி பரிசோதனைகளின் பின்னரே சீ. ஐ. ஏ இவரை அமைச்சராக்கியது. இந்தப் பரிசோனைகள் மிகுந்த உபாதைகளையும் மன வேதனைகளையும் அவருக்கு ஏற்படுத்தின. இதனால் சீ. ஐ ஏ மீது அவருக்கு வன்மம் ஏற்பட்டிருந்தது. அமைச்சரான பின்னும் சீ. ஐ. ஏ இவரைச் சுதந்திரமாகச் செயற் படவிடவில்லை. அத்தோடு தங்கள் நாச வேலைகளையும் இவரைக் கொண்டே செய்வித்தனர். இதனால் இவரிடம் ஏற்பட்ட வன்ம உணர்வு உள்ளூர வளர்ந்து கொண்டே இருந்தது.

சீ. ஐ. ஏ மீது பழிவாங்குவதற்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட அவர் விரும்பவில்லை.

தினக்குறிப்பின் புகைப் படப் பிரதியொன்றைத் தயாரித்து யாரும் அறியாமல் கியூபா அதிபர் பிடல் காஸ்ரோவுக்கு அனுப்புவதற்கு தீர்மானித்தார்.

சேகுவேரா கொல்லப்பட்டு எட்டு மாதங்களின் பின்ஒருநாள்...

பொலியாவிலுள்ள பிரதம சீ.ஐ. ஏ அதிகாரி அடக்க முடியாத ஆத்திரத்தால் படபடத்கின்றான்.

''இது பச்சைத் துரோகம். சும்மா விடமாட்டேன்''

தங்கள் திட்டம் இப்படித் தவிடு பொடியாகும் என்று அவர்கள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

கியூபாவில்வெளியாகிய ''பொலிவியாவில் சேயின் டயறி'' என்ற புத்தகம் மேசையில் கிடக்கின்றது.

அதுஅந்த அதிகாரியைப்பார்த்து ஏளனமாகச் சிரிப்பது போல இருக்கின்றது.

அதே நேரம்.........

சிலியின் இக்குவிக் நகரத்துக் கூடாக அன்ரோனியோ ஆர்குவெடஸ் போலிவியாவை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்.

## கெரில்லாப் போராளி என்பவன்...

''தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாமல், எளிதில் இடம் பெயரும் தன்மை இல்லாமல், நவீன போர்க்களத்தின் அடிப்படை ஆயுதங்கள் கூட இல்லாமல் இருசிறிய அணிகள், வெகுவாக பயிற்சி எடுத்துள்ள, கணிசமான ஆயுதங்கள் வைத்துள்ள இராணுவத்தை எதிர்த்துப் போராட முடியும் என்பது விநோதமாக, புரிந்து கொள்ள முடியாததாகத் தென்படும், இதற்கு அடிப்படை இரண்டு பிரிவினரின் வேறுபட்ட குணாம்சந்தான். கெரில்லாப் போராளி எவ்வளவுக்கெவ்வளவு அசௌகரியமாக இருக்கிறானோ, எவ்வளவுக் கெவ்வளவு இயற்கையின் கடுமையை அனுபவித்து வருகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு வீட்டில் இருப்பதாக உணர்கிறான். அவனது கட்டுப்பாடும் மனவுறுதியும் உயர்ந்து காணப்படுகிறது. அவனது பாதுகாப்பு உணர்வு உச்சத்தில் இருக்கிறது. அதே சமயம், அவன் போரைச்சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒரு நாணயத்தை சுண்டிப்போட்டு அதிர்ஷ்டத்தை நம்புவதுபோல், அபாயத்தை எதிர்கொள்கிறான். அதனால், ஒரு கெரில்லாப் போராளிக்கு மோதலைத் தொடர்ந்து அவன் உயிர் பிழைத்து இருக்கிறானா இல்லையா என்பது முக்கியமில்லாமல் போய் விடுகிறது.''

— சேகுவேரா.

## பிடலுக்கு ஒரு பாடல்

சூரியன் உதிப்பான் என்றாய் நீ
வா, யாரும் செல்லாத பாதையில்
போகலாம் நாம்
உனக்குப் பிரியமான அந்தப்
பச்சை முதலையை விடுவிக்க.

கிளர்ச்சி என்ற தூமகேது
முட்டிச் செல்லும் நம் நெற்றியைக் கொண்டு
அவமானங்களைத் துடைத்தெறிந்து கொண்டே
செல்வோம் வா

வெற்றி பெறுவோம் அல்லது
சாவைக் கடந்து செல்வோம்

முதல் துப்பாக்கி வேட்டில்
புதிய வியப்புடன்
கானகம் முழுவதும் விழித்தெழும்
அங்கே அப்போது அமைதியாக உனது படை;
உன்னருகே நாங்கள்.

உனது குரல் நாற்றிசைக் காற்றைத் துளைத்து
நிலச் சீர்திருத்தம், நீதி, உணவு, விடுதலை
என முழங்கும் போது
சேர்ந்து குரல் கொடுக்க
உன்னருகே நாங்கள்.

கொடுங்கோலனுக் கெதிரான நம்
துல்லிய நடவடிக்கை
பொழுது சாய்கையில் முடிவுறும் போது
அங்கே அப்போது இறுதிப் போருக்காக
உன்னருகே நாங்கள்.

வெகுமதிகள் பெற்றுத் தத்திக் குதிக்கும்
அந்த அலங்கரிக்கப்பட்ட அற்ப பூச்சிகளால்
எங்கள் நேர்மை குலைந்துவிடும் என எண்ணாதே

எங்களுக்கு வேண்டியது
அவர்களது துப்பாக்கிகள், தோட்டாக்கள்,
ஒரு பாறாங்கல்
வேறேதும் அல்ல.

உருக்கு எங்களை வழிமறிக்கும் போது
நாங்கள் கேட்கப் போவது
கியூபாவின் கண்ணீரால் நெய்த ஒரு போர்வை
அமெரிக்க வரலாறு நோக்கிப் பயணிக்கும்
எங்கள் கெரில்லாக்களின்
சடலங்கள் மீது போர்த்த
வேறேதும் அல்ல.

ஆங்கிலம் வழித் தமிழில்
எஸ். வி. ராசதுரை, வ. கீதா
நன்றி- பாலம் யூன் 1990.

(பிடல் காஸ்ட்ரோவிற்கு
சேகுவேரா எழுதிய கவிதை இது)

## ஏர்னெஸ்டோ சேகுவேராவின் வாழ்க்கைக் குறிப்பு

- *1928*ம் ஆண்டு யூன் 14ல் ஆர்ஜென்டைனாவில் பிறந்தார்.
- *1946—1953* வரை வைத்திய கல்லூரி மாணவன்.
- *1953—1954* லத்தீன் அமெரிக்க நாடுகள் பல துக்கு இரண்டாம் தரமாக விஜயம் செய்தார். கௌத்தமாலா என்ற லத்தீன் அமெரிக்க நாட்டில் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டத்தில் பங்கு கொண்டார்.
- *1954—1956* இப்போராட்டம் தோல்வியுற மெக்ஸிக்கோ நாடு சென்று வைத்தியராக கடமையாற்றினார்.
- *1955*—சே, கஸ்ரோவுடன் ''கிறண்மா'' எழுச்சியில் பங்கு கொண்டார். (கிறண்மா என்பது கஸ்ரோவும் அவரின் நண்பர்களும் தாக்குதலுக்கு பயணம் செய்த கப்பலின் பெயர்) இதற்காக மெக்ஸிக்கோவில் சிறை பிடிக்கப்பட்டார்.
- *1956—1959*— கியுபா புரட்சியில் பங்குகொள்ளுதல்; பல கொரில்லா தாக்குதல்களுக்கு தலைமை தாங்குதல்.
- *1959*—யூன் 2. கியுபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோவால் கியுபா பிரஜையாக்கப்படல் ஒக்டோபர் 7ல் விவசாய சீர்திருத்த கைத்தொழில் நிறுவனத்தின் கைத்தொழில் இலாகாவின் தலைவராக நியமிக்கப்படல். நவம்பர் 26ல் கியுபா தேசிய வங்கியின் பிரதம நிர்வாகியாகல்.
- *1961* பெப்ரவரி 23 கைத்தொழில் மந்திரியாதல். மத்திய திட்டமிடல் சூழலின் அங்கத்தவராதல்.
- *1963*ல் அமைக்கப்பட்ட கியுபா சோஷலிஸ புரட்சியின் ஐக்கியப்பட்ட கட்சியின் தலமைக்குழு உறுப்பினராதல்.
- *1965*—மார்ச் 15, இவரின் கடைசி கியுபா காட்சியளிப்பு.
- *1966*—நவம்பர் 7, பொலிவியா கொரில்லா தளத்தைச் சென்றடைதல்.
- *1967*—சேயின் தலைமையில் பொலிவிய தேசிய விடுதலை இராணுவம் அமைக்கப்படல். ஒக்டோபர் 9 சே கொலை செய்யப்படல்.
- *1968* ஜூன், சேயின் 'பொலிவிய டயரி' யின் 1வது பதிப்பு ஹவனாவில் வெளியாகியது.

# நுண்ணறிவுப் போட்டி

## 1க்கான பதில்கள்

கேள்வி: ஆசிரியர் மாணவனுக்கு நல் முன்னுதாரணமாக / சிறந்த உபதேசியாக இருக்க வேண்டும்?

பதில்: ஆசிரியர் மாணவனுக்கு நல் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

விளக்கம்: பண்பாட்டையும், வாழ்க்கை முறையையும் பொறுத்தவரையில் மாணவரிடயே பார்த்துப் பின்பற்றல் தான் அதிகளவான நடைமுறையாய் உள்ளது. உப தேசத்தை கேட்டுப் பின்பற்றல் ஒரு துணையம்சமே.

கேள்வி: மாணவர் ஆசிரியருக்கு கீழ்ப்படிவுள்ளவனாக, / மதிப்புக் கொடுப்பவனாக இருக்க வேண்டும்.

பதில்: மதிப்புக் கொடுப்பவனாக இருக்க வேண்டும்.

விளக்கம்: மதிப்புக் கொடுத்தலை உள்ளடக்காத கீழ்ப்படிவு அதிகாரத்துவத்திற்கான தலைசொறிவேயாகும். ஆசிரியர் மாணவரின் அதிகாரியல்ல; வழிகாட்டியாகும்.

கேள்வி: துரோணர் ஏகலைவன் கதையில் பின்பற்றப்பட வேண்டியது ஏகலைவனின் குருபக்தி/ பயிற்சித்திறன்.

பதில்: பயிற்சித்திறன்.

விளக்கம்: ஆட்சி உரிமை பெற்று சைத்திரிய சாதியைச் சேர்ந்த பாண்டவர்களும், கௌரவர்களும் மாத்திரமே யுத்தக்கலையை கற்க வேண்டும் என்பதே மகாபாரதத்தின் போதனையாகும். இதனாலேயே ஏகலவனின் பெருவிரல் வெட்டப்படுகின்றது. சாதி அடக்குமுறை குருபக்தி என்ற அழகான பசப்புவார்த்தையால் மூடிமறைக்கப்படிருக்கின்றது.

கேள்வி: அறிவின் ஊற்று மூலம் நூல்கள் / நடைமுறை?

பதில்: நடைமுறை.

விளக்கம்: நடைமுறையில் - அனுஸ்டானம் - பட்டறிவு - இருந்தே அறிவு பிறக்கின்றது. நடைமுறை மூலம் பெறப்படும் அனுபவங்களின் அறிவியற் தொகுப்பே அறிவாகும். அனுபவங்கள் என்னும் மூலப்பொருள் மூளை என்னும் தொழிற்சாலையில் செயல்படுவதால் உருவாகும் விளைபொருளே அறிவாகும். நூல்கள் என்பவை பதியப்பட்ட அனுபவ அறிவியற் தொகுப்புகள்

கேள்வி: தாய் மொழிக்கல்வி கற்றலை சுலபமாக்குகின்றது! / தாய் நாட்டுப் பற்று வளர்ச்சியுறுகிறது

பதில்: கற்றலை சுலபமாக்குகிறது.

விளக்கம்: தாய்மொழிக் கல்விகற்றவர்கள் தாயகபண்பாட்டுடனும், சமூக பொருளாதார அமைப்புடனும் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன. இதனால் தாயகத்தின் கல்விமட்டம் உயர்கிறது. அத்துடன் அறிவியல் விடயங்கள் ஜனரஞ்சமாவது சாத்தியமாகின்றது. இதனால் தேசத்தின் சராசரி கல்வி மட்டமும் உயர்வடைகின்றது.

கேள்வி: மனிதனின் கல்வி இயற்கையை அடக்கியாள/ இயற்கையுடன் இணைந்து முன்னேற பயன்பட வேண்டும்.

பதில்: இயற்கையுடன் இணைந்து முன்னேற பயன்பட வேண்டும்.

விளக்கம்: இயற்கையை அடக்கியாளல் என்பது மனிதனின் சக்திக்கு அப்பாறபட்ட விடயம். தூரப்பார்வையின்மையும், குறுகிய லாபநோக்கும் காரணமாக மனிதன் இயற்கையை அடக்கவும், சுரண்டவும் முற்பட்டான். இதன் விளைவாக இயற்கை சமநிலை இழந்தது; அனல் காற்று, கடல் கொந்தளிப்பு, பனிமழை, பேய் மழை, சூறாவளி, எரிமலை வெடிப்பு, கடல்மட்ட உயர்வு ஆகியன இன்று மனிதனை தண்டித்து வருகின்றன. இயற்கையின் சமநிலையை குலைக்காத முறையில் மனிதன் இயற்கையுடன் இணைந்தே செயற்பட வேண்டும்.

கேள்வி: கல்வி மனிதனின் அறிவை/ பண்பாட்டை வளர்த்தெடுக்க வேண்டும்.

பதில்: பண்பாட்டை வளர்த்தெடுக்க வேண்டும்.

விளக்கம்: நற்பண்பாடில்லாதவனின் அறிவு உலகத்துக்கு ஆபத்தானது.

கேள்வி: சிறந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது கூடிய வருமானம் பெற / மனித உழைபின் வினைத்திறனை அதிகரிக்க.

பதில்: மனித உழைப்பின் வினைத்திறனை அதிகரிக்க.

விளக்கம்: கூடிய வருமானம் பெறுதலை மீளாக்கமாக கொள்ளும் போது மனித சமூகத்திற்கு பயனற்ற தொழில் நுட்பங்களையும் உருவாக்கும் நிலை தோன்றும். இன்று நடைபெறுவது அதுதான்.

## 1991ன் முத்தமிழ் விழா

# ஒரு முப்பெரும் திருப்பம்

ஆங்கிலேயர் இலங்கைத் தீவையும் இந்தியாவையும் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தபோது இவ்விரு பூகோளப் பரப்பிலும் தமிழரும் வாழ்ந்தார்கள். இத் தமிழர்களின் தாய்மொழி தமிழ்தான். அதில் சந்தேகமே இல்லை. ஆனால் இங்குவாழ்ந்த தமிழ்மேட்டுக் குடியினரின் நடப்பிலிருந்த மொழி சங்கதமே (சமஸ்கிருதம்) தவிர அவர்களின் தாய்மொழியல்ல. இலங்கைத் தீவில் இந்தநிலை இருக்கவில்லை.

ஆனால் ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் பின்னர் இவ்விரு பூகோளப் பரப்பிலும் வாழ்ந்த தமிழ்மேட்டுக் குடியினரின் நடப்பிலிருந்த மொழி ஆங்கிலமாக மாறியது. ஆங்கிலத்தைப் பேசவும் எழுதவும் மட்டுமல்ல அதில் சிந்திப்பதற்கும் பயிற்சி பெற்றார்கள். அதில் வெற்றியும் கண்டார்கள். மொழியில் மட்டுமல்ல நடை உடை பாவனையிலும் ஆங்கிலேயரைப் பின்பற்றுவதில் பெருமை கண்டார்கள். இத் தவறான போக்கைக் கண்டித்து அக்காலத்தில் இயக்கங்கள் தோன்றினாலும் அவை வெற்றி பெறவில்லை. தாய்மொழிக் கல்வி நடைமுறைக்கு வந்துங்கூட இந்நிலை மாறவில்லை ஆனால் தாய்மொழிக் கல்வியின் அறிமுகத்துடன் ஆங்கிலம் தெரியாத புதியதோர் தமிழ் 'மேட்டுக் குடியினர் தோற்றம் பெற்றார்கள். இவர்களை ஆங்கிலம் தெரிந்த மேட்டுக் குடியினர் ஒரு 'இழிசாதி, யாகவே நோக்குகிறார்கள். ஆங்கிலம் தெரிந்த ஒரு ஆசிரியரின் முன் ஆங்கிலம் தெரியாத ஒரு அதிபர் கூனிக் குறுகி நிற்பதே வழமையாகவுள்ளது இதற்கோர் சிறு உதாரணமாகும்.

தமிழை தாய்மொழியாக கொண்ட இந்த ஆங்கில மேட்டுக் குடியினர் தமிழிற்கு கொடுக்கும் மதிப்பு என்ன தெரியுமா? தமது சடங்குப் பொருளான பட்டு வேட்டிக்கும் கூறைச்சேலைக்கும் தமிழர் வழங்கும் மதிப்பையே இவர்கள் தமிழுக்கும் வழங்குகிறார்கள். தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளுக்கும், தமிழ்விழாக்களுக்கும், தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் இவர்கள் தமிழை அழகாக அணிந்து செல்வார்கள். சிலவேளைகளில் இரவல் வாங்கியும் அணிந்து செல்வார்கள். அங்கு தமிழின் பழம் பெருமைபற்றி விளாசிவாங்குவார்கள் நிகழ்ச்சி முடிந்தவுடன் பட்டுவேட்டியையும் கூறைச் சேலையையும் வைப்பது போல் தமிழை மிக பாதுகாப்பான பெட்டியில் பூட்டிவைத்து விடுவார்கள். பிரித்தானிய காலனிக்குப் பின் நடந்த தமிழ் விழாக்களில் ஏராளமானவை இவ்விதமானதாகவே இருந்தது. வெறுமனே மரபுபேணல் சம்பிரதாய சடங்காகவே இவை இருந்துள்ளன.

இன்னோர் வகையான தமிழ் விழாக்கள் அற்பத்தனமான குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவையாகவே இருந்துவந்துள்ளன. ஒரு மொழியின் தகைமை அல்லது வளம் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒருவிடயம். ஆனால் ஒருமொழியின் சமூக அந்தஸ்துக்கும் அரசியலுக்கும் தொடர்புகள் உண்டு. மொழியின் வளமும்

---

கேள்வி: வளர்ந்து வரும் நாடுகளின், சிறப்புக் குணாம்சம் தாழ்ந்த பண்பாடு / வளர்ச்சி குன்றிய தொழில் நுட்பம்?

பதில்: வளர்ச்சி குன்றிய தொழில் நுட்பம்.

விளக்கம்: நாகரீகம் என்பது வேறு பண்பாடு என்பது வேறு. நாகரிகம் என்பது அந்நாட்டின் தொழில் நுட்ப வளர்ச்சியுடனும் தொடர்பு பட்ட மனித வாழ்க்கை முறை. பண்பாடு என்பது மனிதர்கள் தமக்கிடையே வைத்திருக்கும் பரஸ்பர உறவு முறையாகும். தொழில் நுட்ப வளர்ச்சியும் அறிவியல் வளர்ச்சியும் பண்பாட்டில் ஆழ்ந்த செல்வாக்குச் செலுத்துவது உண்மை. இது தீயதாகவும் அமையலாம், நல்லதாகவும் அமையலாம்.

வளர்ச்சி குன்றிய தொழில் நுட்பத்தின் காரணத்தால் வளர்முக நாடுகள் பின்தங்கிய தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளன என்பது உண்மை. அதே நேரத்தில் பல வளர்முக நாடுகள் வளர்ச்சி பெற்ற நாடுகளை விட உயர்ந்த பண்பாட்டைக் கொண்டனவாகவும் உள்ளன.

கேள்வி: தற்சார்பு பொருளாதாரமானது ஒரு நாடு தனது தேவைகள் அனைத்தையும் தானே உற்பத்தி செய்து கொளவது/தனது தேவைக்கு பிறரைச் சாராது இருத்தல்.

பதில்: தனது தேவைக்கு பிறரைச் சாராது இருத்தல்.

விளக்கம்: தேவைகள் பல்வகைப்பட்டது. நாகரீக வளர்ச்சியுடன் தேவைகளும் அதிகரித்துச் செல்கின்றன. தனது நாட்டில் தனது தேவை போக மீதமாக உற்பத்தியாவதை விற்பதன் மூலமே தனது ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

அரசியலும் இணைந்துதான் மொழியின் சமூக அந்தஸ்தை தீர்மானிக்கின்றன. ஆகவே மொழிப்பிரச்சினையுடன் அரசியல் இணையக்கூடாது என்பது தவறு. ஆனால் அது எவ்விதம் இணைகிறது என்பது விடயம்.

தமிழ்நாட்டில் தி. மு. க. கட்சியும், இலங்கையில் தமிழரசுக்கட்சியும் மொழியின் பெயரால் எத்தனையோ விழாக்கள் எடுத்தார்கள். ஆனால் மொழி வளர்ச்சிக்காக ஏதாவது திட்டமிட்ட நடவடிக்கை எடுத்தார்களா? எதுவுமே இல்லை. வெற்று மேடைப்பேச்சு வீரர்களாக இருந்து விட்டார்கள். சரி விடுவோம். மொழியின் அரசியல் அந்தஸ்துக்காவது ஏதாவது செய்தார்களா? இல்லை. தமிழ்மொழியின் அரசியல் அந்தஸ்தின்மையை ஓர் பிரச்சனையாய் உருவாக்கினார்கள். பிரச்சினையை தீர்க்கும் நோக்குடன் அல்ல; மாறாக பிரச்சினையில் குளிர்காய்வதற்காக.

இவற்றிற்கு, எதிர்மாறாக நடந்து முடிந்த முத்தமிழ் விழாவோ மூன்று விடயங்களில் ஒரு மாபெரும் திருப்பமாக அமைந்துள்ளது.

1. மொழியின் அரசியல் அந்தஸ்துக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஓர் அரசியல் - இராணுவ அமைப்பால் நடத்தப்பட்டது. ஆகவே துல்லியமான அரசியல் நோக்கு கொண்டது.

அரசியல் நோக்கு மட்டுமல்ல. அதை நிறைவேற்றும் ஆற்றலும் கொண்டது என்பதை முத்தமிழ்விழா எடுத்துக் காட்டி விட்டது. படை அணிதிரட்டுவதும், போர் முனைகளில் போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் இருக்கும் அதே திறமை கலை, இலக்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து மக்களுக்கு வழங்குவதிலும் தம்மிடம் உண்டு என்பதை அவர்கள் நிருபித்து விட்டார்கள். மக்கள், கலைஞர்கள், கல்விமான்கள், போராளிகள் ஆகியோர் ஒரே நிகழ்ச்சிக்காக ஒரே விதமான ஆர்வத்துடன் ஒன்றுகூடியது ஒரு மாபெரும் வெற்றியேயாகும்.

மீண்டும் சொல்வதானால் மொழியின் அரசியல் அந்தஸ்துக்காக ஆயுதபோராட்டம் நடத்திவரும் ஓர் இயக்கம் மொழியின் வளத்தைப் பெருக்குவதற்கான போராட்டத்திலும் அமைப்பாளன் என்ற பாத்திரத்தை எடுத்திருக்கிறது. இது நம்பிக்கையான ஒரு எதிர்காலத்துக்கான பச்சைவிளக்கன்றி வேறென்னவாய் இருக்கமுடியும்?

2. இது ஒரு வெற்று சம்பிரதாய சடங்கல்ல இது செயல் சாராத பாண்டித்திய கட்டுரைகளை வாசித்து விட்டு எழுந்து போகும் ஒரு கூடமாகவும் இருக்கவில்லை. மொழி வளர்ச்சிக்கான திட்டவட்டமான நடைமுறை வேலைத் திட்டங்களுடன் இணைந்த ஒரு விழாவாகும். கலை இலக்கிய ஆக்கங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் அடிமட்டம்வரை எடுத்து செல்லப்பட்டன. இந்தப் 10 நாட்களும் ஏராளமான படைப்புகள் மேடையேறின. தமது ஆற்றலையும், திறனையும் வெளியிட சந்தர்ப்பங்களின்றி இருந்த பல கலைஞர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது புதிய கலைஞர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். தமிழ்மொழிச் சொற்களில் உள்ள அந்நிய சொற்களை அகற்றவும்' புதிய சொற்களை ஆற்றவுமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன.

3. மொழி வளர வேண்டுமானால் அம் மொழி பேசும் மக்கள் வளரவேண்டும். மக்கள்தான் மொழியைப் பேணி பாதுகாக்கிறார்கள். மக்களுக்காகத்தான் மொழி வளர்கிறது. மொழியினதும் கலை - இலக்கியத்தினதும், பண்பாட்டினதும் வளர்ச்சிக்காக உழைப்போர்கள் அரசியல் பேதமின்றி ஊக்குவிக்கப்பட வேண்டும். அவர்கள் சமூக அந்தஸ்து மிக்கவர்கள் என்பது புரியவைக்கப்பட வேண்டும். இந்நோக்கிற்காகத்தான் முத்தமிழ் விழா மாமனிதர்களுக்கு பரிசில்கள் வழங்கி, கௌரவித்தது. இந் நிகழ்ச்சியே முத்தமிழ் விழாவிற்கு மகுடம் இட்டதாகவும் அமைந்திருந்தது. அரசியல் வாதிகளையும் நடைமுறைக்கு இறங்கி வராத படிப்பாளிகளையும் போற்றித் துதிபாடிய காலம் மறைந்து சமூக ஊழியர்களை மாமனிதராக்கும் காலம் தோன்றியது முத்தமிழ் விழாவின் மிகப்பெருந் திருப்பமாகும்.

இத் திருப்பங்கள் ஒரு புரட்சிகரப் பிரகடனங்களே. இப்பிரகடனங்களின் செயற்பாடுகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டாலும் அவை உறுதியாக முன்னெடுக்கப்படுவதில்தான் இப் பிரகடனங்களின் வெற்றி தங்கியுள்ளது.

வெற்றி கிட்டும் என்று நம்புவோம்!
ஒவ்வொரு தமிழனும்
இவ்வழியில் செயற்படுவது அவசியம்
என்பதையும் புரிந்து கொள்வோம்!

— லோகன் —

வரலாறு

# சௌரி சௌரா—
## காந்தியின் தவறு

இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சியை விழ்த்துவதற்தாக 1920 - 21 இல் மகாத்மா காந்தி பெரியளவிலான இயக்கத்தை ஆரம்பித்தார். ''பிடரி சிலிர்த்தெழுகிறது,'' ''சாவின் நர்த்தனம்'' ஆகிய அவரது புகழ்பெற்ற கட்டுரைகள் அக்காலத்திலேயே எழுதப்பட்டன.

எதிர்ப்பியக்கம் உத்வேகம் பெற்றது.

1921ம் ஆண்டு சௌரி சௌரா என்ற கிராமத்தில் அமைதியான எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிச் சில பொலிசாரையும் கொலை செய்தனர்.

மக்கள் வன்முறையில் ஈடுபட்டனர் எனக் கூறிக் காந்தி போராட்டத்தை விலக்கிக்கொண்டு சிறை புகுந்தார்.

இது காந்தி புரிந்த ஒரு பெரிய தவறு.

காந்தியின் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் இச் செயலினால் ஆத்திரமுற்றனர். மனச் சோர்வடைந்தனர். அப்போது சிறையிலிருந்த ஜவகர்லால் நேருவும் மோதிலால் நேருவும் சிறையிலிருந்தே இச் செயலை எதிர்த்தனர்.

காந்தியின் இந்தத் தவறு எதிரிக்குக் கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்தது. இக்கால அவகாசத்தைப் பயன் படுத்தி ஆங்கிலேயர்கள் பல வழிகளில் எதிர்ப்புச் சக்திகளைப் பிளவுபடுத்த முனைந்தனர். வேற்றுமை உணர்வுகளைத் தூவி இந்து - முஸ்லிம் கலவரங்களைத் தூண்டி விட்டனர்.

தனது அகிம்சைத் தத்துவம் பகைவனுக்குச் சாதகமாக மாறிய நடைமுறைத் தவறைக் காலங் கடந்தே காந்தி புரிந்து கொண்டார்.

1921இல் அவர் மீரத் சிறைக்கு விஜயம் செய்த போது மீரத் சதிவழக்கில் சிறைவாசம் அனுபவித்து வந்த கம்யூனிஸ்டுகளை அங்கே சந்தித்தார். அவர்களிடம் பின்வரும் கேள்வியைக் கேட்டார்,

''இந்திய தேசிய காங்கிரஸின் லாகூர் மகாநாடு இன்னும் ஓரிரு மாதங்களில் கூட இருக்கின்றது. அதில் காங்கிரஸின் இலட்சியம் பூரண சுயராஜ்யமே என்னும் தீர்மானத்தைக் கொண்டுவரப் போகிறோம். இந்த நிலையில் கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து பணியாற்றத் தயாரா?''

சௌரி சௌராவைப் போல, பொலிசாரின் பலாத்காரத்தினால் மக்கள் வெகுண்டெழுந்து அகிம்சையைக் கைவிட்டுப் போராட முனைந்தால் காந்தி மறுபடியும் போராட்டத்தை விலக்கிக் கொள்வாரா என அவர்கள் அவரைக் கேட்டனர்.

சிறிதுநேர யோசனைக்குப் பின் ''இல்லை'' என அவர் பதிலளித்தார்.

நூலறிமுகம்

# சமூக விஞ்ஞான சுடர்

1990ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து காலாண்டிதழாக வெளிவரும் சமூக அறிவியல் அறிவிதழின் (Journal) மூன்று இதழ்கள் இதுவரை மலர்ந்துள்ளன

'சமூக கல்வி' என்ற பாடத்தின் கீழ் சரித்திரம், பூமிசாஸ்திரம் ஆகியனவற்றையும் ஏனைய கலைப் பாடங்களையும் ஒன்றாக கலந்து கற்பிக்கப் படுகிறதே தவிர 'சமூக அறிவியல்' என்பது அங்கு விலக்கி வைக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் இயக்கம் சம்பந்தமான நியதிகள் பற்றிய கல்வியே சமூக அறிவியலாகும். மேற்படி கல்வியை கற்பதற்கான வாய்ப்புகளை பாடசாலை கல்வித் திட்டம் புறக்கணித்தே வருகிறது. பல்கலைக் கழகத்தில் ஒரு குறிப்பிட்டசாராரே இத்தகைய கல்வியைக் கற்கும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள். சமூகத்தின் செயற்பாட்டு நியதிகளைப் புரிந்து கொள்ளல் கற்றவன் என தம்மை அறிமுகப் படுத்திக்கொள்ளும் அனைவருக்கும் அவசியமானதாகும்.

'சமூக விஞ்ஞான சுடர்' இதன் அவசியத்தைப் பூர்த்தி செய்வதற்கு ஓரளவுக்கு உதவும் எனக் கூறலாம். ஏறத்தாள இதன் அனைத்துக் கட்டுரைகளும் தத்துவார்த்த வகைப்பட்டதாகவோ, கோட்பாடுத்தல் தன்மை மிக்கதாகவோ தான் அமைந்துள்ளன. நீண்ட தொடர் கட்டுரைகளாகவே இவை அமைந்துள்ளன. பாண்டித்திய (Academic) வட்டாரங்களுக்கு புறம்பாக வெளிவரும் இவ்வறிவிதழ் தனது கட்டுரைகளை மேலும் இலகுவானதாக்கினால் வரவேற்கத்தக்கது.

ஒளி மூன்று, கல்வி அமைப்பில் அடிப்படை மாற்றம் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது தமிழீழ தேசிய பொருளாதாரத்தின் எதிர்கால பயணம் எவ்விதம் அமைய வேண்டும் என்பது பற்றியும் மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் உள்முரண்பாடு பற்றியும், பாலியற் கல்வி தொடர்பான கட்டுரையும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

மாணவர்கள், சமூக நலன் விரும்பிகள் அனைவரும் படிக்க வேண்டிய ஒரு அறிவிதழ் இதுவாகும்.

ஆசிரியர் - அ. கௌரிகாந்தன்
வெளியீட்டாளர் - சமூக விஞ்ஞான வெளியீட்டகம்
கிளிநொச்சி. விலை ரூபா 20/-

# மண்ணின் உயிர்

ஈரமற்றுப் போனதடா இந்நிலம்
அட மானுடனே காதல் செய்.
நாம் பிறந்ததும் தவழ்ந்ததும்
மண் தின்று வளர்ந்ததுமாய் இந்தப் பூமி
கடலைப் பொடியாக்கிப் போதல்
உனக்குச் சம்மதமா?

நிலமகளின் பூமேனி
தீயில் அகப்பட்ட பிள்ளைத்தாய்ச்சியைப் போல்
எரிந்தும் சரிந்தும்
கொப்புளங்கள் போட்டுடைந்த
புண்ணாகிப் போதல்
உன் நெஞ்சைப் பிழியவில்லையா?

அநாதரவான சிறிசுகளாலும் அபலைப் பெண்களாலும்
காதல் முனை கருகி வாடும் கன்னியராலும்
கலங்கித் தவிக்கும் உன் தாய் பூமியை
ஒரு குழந்தையைப் போல் மடிகிடத்திக் கொஞ்ச
உன் மனம் கனியவில்லையா?
உன் தாய் முன்றலில் தவழ்ந்தவன் அல்லவா
அட காதல் செய் மானுடனே

காதற் பெருக்கின் வசமாகி இசைவுற இங்கு
எல்லாமே காத்திருக்கின்றன
கண்ணில் நீர் மல்கிப் புரளும் உன் காதற்பெருக்கு
சாம்பல் பூத்துப்போன இம்மண்ணெங்கும்
ஓடிப்பரவி வெக்கை தணிக்கட்டும்

எங்கெங்கும் வரண்டுபோன இந்தமண்ணின்
பாளம் பாளமான பிளவுகளில்
காதலின் ஜீவ ஊற்றுக் கண்கள் திறபடட்டும்
பற்றிப் படரும் அன்பின் கொடியோடலில்
காதல் அரும்புகள் கண்ணிகட்டட்டும்
அட காதல் செய் மானுடனே
காதல் இம்மண்ணின் உயிர் நிலை கண்டு கொள்

சு. வில்வரத்தினம்.

நன்றி
முத்தமிழ் விழா மலர்
1991

# பெண்களின் கலைத்துவங்கள்

பொதுவாக பெண்களின் கலை உணர்வு தையல், பாய் இழைத்தல், கோலம் போடல், பின்னல் வேலை, எனக் கட்டுப் படுத்தப்பட்டது.

இசை, நடனம், நாடகம் என்ற எத் துறைகளை எடுத்தாலும் அக்கலைத் துறை களின் ஊடாக எத்தனை வலிமையான கருத்தையும், இயல்பாக விளங்க வைக்க லாம். இந்தக் கலை துறைகளில் ஈடுபட ஆர்வமுள்ள எவரும் இதனுள் மூழ்கித் திளைத்து முத்தெடுக்க உரிமையுடையவர் கள். ஆண்களுக்கு மட்டும் தான் இவற்றில் ஈடுபட உரிமையுண்டு என்று சொல்லிவிட முடியாது. இது மனித உரிமை. இந்த உரிமையைப் பறிக்க நினைக்கும் எவருக் கெதிராகவும் போராடலாம் தடைக்கற்க ளாக இருக்கும் பிற்போக்குத்தனமான கருத் துக்கள் எதிர்க்கப்பட வேண்டும். பெண்க ளுக்குள்ள உரிமைகளுக்காக போராட, இந் தக் கருத்துக்களை எதிர்த்து சரியான கருத் துக்களை முன்வைக்க சகல ஆண்களும், பெண்களும் முன்வரவேண்டியது மட்டுமல் லாமல் செயற்படவும் வேண்டும். முற் போக்குத் தனமான செயல்பாடுகள் மூலம் பிற்போக்குத் தனமான கொள்கைகளை உடைத்தெறிய வேண்டும்

சகல கலைகளிலும் ஈடுபடுவதால் பெண் கள் தாம் மட்டும் வளரவில்லை, இந்த சமூகத்தையும் வளர்க்கின்றார்கள் என் பதை புரிய வைக்க வேண்டும். விழிப் புணர்வை ஏற்படுத்த சரியானதோர் ஊட கமாக இருக்கும். இந்தக் கலைத்துறை சார்ந்த விடயங்களில் பெண்களுக்கு ஈடுபட உரிமை உண்டு என்பது மட்டுமல்ல இடைக்காலத்தின் தான் இந்த உரிமை பறிக்கப்பட்டது என்பதையும் சகலரும் புரிவதோடு பெண்களின் கலைத்துவங்கள் ஏன் மறைக்கப் பட்டன என்பதை ஆராய முன் வரவேண்டும்.

காயத்திரி
கலைகளில் மறைந்த உண்மை

நன்றி
முத்தமிழ்விழா மலர் 1991

## ❁ கட்டுரைப் பயிற்சி

சிறிலங்கா அரசு தமிழீழ மக்களுக்கு எதிரான ஒரு போரைத் தொடுத்து 1991 யூன் மாதத்துடன் ஒரு வருடமாகின்றது. இந்தப் போர் ஒரு இறந்த காலமல்ல. இது கடந்துவிட்ட ஒரு வரலாறுமல்ல இது தொடர்ந்து செல்லப்போகும் போர்காலங்களின் ஒரு அத்தியாயம் மாத்திரமேயாகும். இப் போரைப்பற்றி நாம் பல கோணங்களில் இருந்து மதிப்பிட முடியும். இப்போர் பல்வேறுபட்ட தாக்கங்களையும் படிப்பினைகளையும் எமக்குத் தந்துள்ளது. பாடசாலைக் கல்வியையும் இது பாதித்துள்ளது என்பது ஆச்சரியமானதல்ல. கல்வியாளர்கள் இப் போரை எவ்விதம் எதிர்கொண்டார்கள் என்பதை கீழ் கண்ட தலையங்கத்தின் கீழ் ஒரு கட்டுரையாக எழுதி அனுப்புங்கள். கல்வியாளர்கள் என்ற பதம் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியில் நாட்டங்கொண்ட ஏனைய மூத்தோர்கள் ஆகியோரைச் சுட்டி நிற்கிறது. இது ஒரு பயிற்சியே தவிர போட்டியல்ல.

உங்கள் கருத்துக்களை சுதந்திரமாக எழுதி அனுப்புங்கள். நாம் மீள உங்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய முகவரியை குறிப்பிட்டு அனுப்புவீர்களானால் வரவேற்கத்தக்கதாக அமையும்.

தலைப்பு- 'ஒரு வருடப் போரும்
கல்வியாளர்களின் எதிர்கொள்ளல்களும்'

நன்றி

— ஆசிரியர்


## கலை வெளிப்பாடு


கலைகள் நுகர்வோனிடத்து உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்துமென்ற விளக்கம் மெய்யான கலைக்கும், போலிக் கலைக்குமிடையிலான வேறுபாட்டைத் தரம்பிரித்தறிய இயலாதபடி செய்துவிடுகிறது. மேலும் கலையை வெறுமனே பொழுது போக்குச் சாதனமாக எண்ணும்படியும் செய்துவிடுகிறது கலை இலக்கியங்களில் கட்டற்ற கற்பனையின் அவசியத்தை வலியுறுத்துவோர். ஒரு கலையின் 'பெறுமதி'' அது கலைஞனுக்குத் தரும் மன வெழுச்சியிலும், உள்ளக்கிளர்ச்சியிலும் தங்கியுள்ளதென்பர். கலையை பொழுதுபோக்குச் சாதனமாக கொள்ளும் கலைஞரதும் (?) சுவைஞரதும் (?) அபிப்பிராயமும் இதுவாகவிருக்கிறது.

பெரும்பாலான மக்களால் பொழுதுபோக்கிற்கென விரும்பி வாசிக்கப்படல் கலைக்குரிய ''கட்டளைக்கல்'' அல்ல. மணியனும், புஸ்பா தங்கத்துரையும், ராஜேந்திரக்குமாரும் வெற்றிகரமான கலை வணிகர்களே ஒழிய கலைஞர்கள் அல்ல. கலையின் பெயரால் சமுதாயச் சீரழிவிற்கும் தவறான கண்ணோட்டங்களிற்கும் மக்களை அவர்கள் இட்டுச் செல்கின்றனர். உணர்ச்சிவசப்படுத்தும் கலை பகுத்தறிவுச் சிந்தனையை மழுங்கடித்து விடுகிறது.......

கலையைப் பொழுது போக்குச் சாதனமாக எண்ணுவோரும், விரைவு விற்பனையை எண்ணிக் கதை விடுவோரும் வணிக நோக்குடைக் கலைஞர்களும் (?) கலைஞனின் உணர்ச்சித் துலங்கலையே கலையின் பண்பாடாகக் கருதுகின்றனர். இலக்கியம் ஏற்படுத்தும் உணர்ச்சி வெளிப்பாடு அதிலிடம்பெறும் சொற்களின் அர்த்தத்தில் இருந்து வெளிப்படுத்துகிறது. பாடும் முறையினால் இசை கிளர்ச்சியனுபவத்தைத் தருகிறது. ஓவியத்தில் வரைய எடுத்துக்கொண்ட கருப்பொருளில் உணர்ச்சி வெளிப்பாடு தங்கியுள்ளது. நாடகத்தில் நடிகனின் பாவனையினால் இது வெளிப்படுகிறது கலைஞனின் உணர்ச்சி வெளிப்பாடு கலைஞனை கலையுடன் ஒன்றிக்க உதவுகிறது. இவ்வொன்றிப்பு கலையனுபவத்தை தருகிறது. அது ஓர் சிறப்பு வகையான அறிகையனுபவமாகும். உணர்ச்சித் துலங்கல் கலையனுபவமல்ல, அது கலையின் நோக்கமுமல்ல..........

நன்றி - கலாநிதி
சோ. கிருஷ்ணராஜா
கலைவெளிப்பாடு




நன்றி: சிரித்திரன்

## ஆளுக்கொரு மிளகாய்ச்செடி நடும் இயக்கம்






திரன்

நன்றி: சிரித்திரன்